www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

**தமிழ்நாடு மேல்சாதி வெறியர்களின் சொர்க்க பூமியா?**



''முசுலீம்கள், கிறித்தவர்கள், கம்யூனிஸ்டுகள் - இவர்கள்தான் இந்து சமூகத்தின் எதிரிகள்'' என்கிறார் ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்தாந்த குரு கோல்வால்கர். பார்ப்பனிய இந்து மதத்தின் எதிரிகள், இந்தியாவிற்கும் எதிரிகள் என்பதுதான் இந்து மதவெறியர்களின் மொழி.

உண்மையில், இந்த நாட்டின் எதிரிகள் உழைக்கும் மக்களுள் ஒருவரான முசுலீம்களா? கிறித்தவர்களா? கம்யூனிஸ்டுகளா? இல்லை, நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து வரும் இந்து மத வெறியர்களா?

www.padippakam.com

# இந்துவெறியர்களுக்கு ம.க.இ.க.வின் பதிலடி

மத்தியப் பிரதேசத்தில் கிறித்தவ பாதிரிப் பெண்கள் மீது பாலியல் வன்முறை, குஜராத்தில் தேவாலயங்கள் இடிப்பு என சிறுபான்மை கிறித்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி வரும் இந்துவெறிக் கும்பல், அண்மையில் திருச்சியில் கிறித்தவர்களுக்கு எதிராகச் சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்து வம்புக்கு இழுத்தது.

திருச்சி உறையூர், தில்லை நகர் பகுதிகளில், "இந்துவாய்ப் பிறந்தோம், இந்து உணர்வோடு வாழ்வோம்", "ஜெபம் செய்து குணமாக்கும் கிறிஸ்தவனே, நீ ஏன் மருத்துவமனை நடத்துகிறாய்?" என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுவரெழுத்துகளை சி.எஸ்.ஐ. மருத்துவமனை எதிர்சுவற்றில் இந்துமுன்னணி காலிகள் எழுதி வைத்தனர்.

இதனால் ஏதேனும் விபரீதம் ஏற்படலாம் என்று அஞ்சிய சி.எஸ்.ஐ. மருத்துவமனை நிர்வாகம், அச்சுவரெழுத்துக்களை அழித்துவிட்டு, எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் முடங்கிக் கொண்டது.

ஆனால், மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள், உறையூர் பகுதியில் இந்து முன்னணி எழுதியிருந்த சுவரெழுத்துகளின் கீழே, "மந்திரம் ஓதி வயிறு வளர்க்கும் பார்ப்பானே... ஞானக்கண் படைத்த உங்க சங்கராச்சாரிக்கு கண்கண்ணாடி எதற்கு? இந்து முன்னணியே பதில் சொல்!" என்று எழுதி பதிலடி கொடுத்தனர்.




இந்து முன்னணிக்கு எதிராக தோழர்கள் சுவரெழுத்து எழுதும் போதே, மக்கள் கூடி நின்று வரவேற்று ஆதரித்தனர். துடப்பம் எட்டாத இடத்தில் தூசு போகாது; பதிலடி கொடுக்காமல் இந்துவெறி பாசிஸ்டுகளை வீழ்த்தவும் முடியாது என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு தூண்டுதலாக அமைந்தது.

தகவல்:
ம.க.இ.க.,
திருச்சி.

# அடிப்படை வசதிகள் கோரி ஆர்ப்பாட்டம்

திருச்சியில் செந்தண்ணீர்புரம், சங்கிலியாண்டபுரம், அண்ணாநகர், எம்.ஜி.ஆர். நகர், வள்ளுவர் நகர், ராமமூர்த்தி நகர் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் நீண்டகாலமாக அடிப்படை வசதிகள் புறக்கணிக்கப்பட்டு அல்லற்படுகின்றனர். இப்பகுதிகளில் முறையான குடிநீர், வடிகால் வசதிகளோ, கழிப்பிடங்களோ கிடையாது. இரவு நேரங்களில் சாலை ஓரமாக அவசரத்துக்குச் செல்லும் பெண்கள் லாரி ஓட்டுநர்களின் அசிங்கமான பேச்சுக்களால் அவமானப்பட நேரிடுகிறது. இப்பகுதிகளில் இரவு நேரங்களில் சாராய ஆலைக் கழிவுகள் திறந்து விடப்படுகின்றன. சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் வகையில், சட்ட விரோதமாகச் செயல்படும் எண்ணெய் ஆலைகள் கரும் புகையைக் கக்குகின்றன.




வாகனங்கள் தெருவில் நுழைய முடியாத படியும், இறந்தவர்களையோ, நோய்வாய்ப்பட்டவரையோ தூக்கிச் செல்ல முடியாத படி சட்டவிரோத ஆக்கிரமிப்புகளும் பெருகி விட்டன. மழைக் காலங்களில் இப்பகுதி முழுவதும் சாக்கடைச் சகதியாகி விடுகிறது.


இந்நிலைமைகளை விளக்கி, இப்பகுதிகளில் சாலை, குடிநீர், வடிகால், கழிப்பிட வசதிகளைச் செய்து தரக் கோரியும், வீட்டுவரி உயர்வை ரத்து செய்யக் கோரியும் பிரச்சாரம் செய்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, கடந்த 28.12.98 அன்று மாநகராட்சி அலுவலகம் முன்பு எழுச்சி மிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் சந்திரன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பகுதிவாழ் பெண்கள் திரளாகப் பங்கேற்று ஆதரித்தனர்.

தகவல்: புரட்சிகர மாணவர்
இளைஞர் முன்னணி, திருச்சி.

# நம்பிக்கையான தொடக்கம்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் உள்ள சக்கம்பட்டியில் கைத்தறி, விசைத்தறி தொழிலாளர்களும் விவசாயிகளும் நிறைந்து உள்ளனர். இப்பகுதியிலுள்ள 'இடது', 'வலது' போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தரகு வேலை செய்வதையே தொழிலாகக் கொண்டு இயங்கி வந்தன. இதனால் வெறுப்புற்று இருந்த இக்கட்சிகளின் அணிகள் ஒரு சரியான, புரட்சிகரமான அமைப்பு கிடைக்காத என ஏங்கினர். இந்நிலையில் இவ்வட்டாரத்தில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் போர்க் குணமிக்க அரசியல் போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள், பிரச்சாரங்களைக் கண்டு ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் வி.வி.மு.வுடன் தொடர்பு கொண்டனர். வி.வி.மு. வெளியீடுகள், புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய பத்திரிகைகளைப் படித்து தமது கட்சியில் கேள்வி கேட்கத் தொடங்கினர். இதைக் கண்டு மிரண்ட தலைமையோ, இப்புத்தகங்களைப் படிக்காதே! வி.வி.மு.வுடன் சேராதே! அவர்கள் தீவிரவாதிகள்! என்று பீதியூட்டியது. சில அரசியல் விடலைகளோ தம்மை 'சக்கம்பட்டி மார்க்ஸ்' என்று கூறிக் கொண்டு, இவ்விளைஞர்களை வி.வி.மு.வில் சேர வேண்டாம் என 'தத்துவார்த்த போதனை' செய்தனர்.

ஆனால் இந்தப் போலி கம்யூனிசப் பெருச்சாளிகளின் சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தால் புரட்சிகர இளைஞர்களை இனியும் ஏய்க்க முடியவில்லை. போர்க் குணமும் புரட்சியின் மீது நம்பிக்கையும் கொண்ட இளைஞர்கள் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து விலகி, வி.வி.மு. கிளையை தமது பகுதியில் கடந்த 15.12.98 அன்று தொடங்கினர். கிளை தொடக்க விழாவிற்கு தோழர். தண்டபாணி தலைமையேற்றார். அதையொட்டி நடந்த பொதுக் கூட்டத்துக்கு தோழர். பரமன் தலைமை தாங்க, தோழர். செங்கொடி சிறப்புரையாற்றினார். ம.க.இ.க.வின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. போராட்டமே வாழ்க்கையாகக் கொண்ட கைத்தறி - விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இக்கிளைத் தொடக்க விழா அமைந்தது.



தகவல்:
வி.வி.மு.
ஆண்டிப்பட்டி.
வட்டம்


படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 14

இதழ்: 5 - 6

16 ஜன.'99 - 15 பிப்.'99

உள்நாடு:
தனி இதழ்:ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# ஈரோ நாணயம்: உலக மேலாதிக்கக் கொள்ளைக்கு புதிய ஆயுதம்

ஐரோப்பியக் கூட்டமைப்பிலுள்ள 15 நாடுகளில் அயர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, நெதர்லாந்து, பிரான்ஸ், பின்லாந்து, பெல்ஜியம், போர்ச்சுக்கல், லக்சம்பர்க், ஸ்பெயின், ஜெர்மனி ஆகிய 11 நாடுகள் ஜனவரி 1, 1999 முதல் பொது நாணயமான 'ஈரோ'வை நடைமுறைக்குக் கொண்டு வந்து விட்டன. இதற்கான பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நிறைவேற்ற இயலாததால் கிரீஸ், இதில் இணைய முடியவில்லை. டென்மார்க், இங்கிலாந்து, ஸ்வீடன் முதலியன, இதில் இணையாமல் வெளியே உள்ளன.

ஐரோப்பியக் கூட்டமைப்புப் பொது நாணயமான 'ஈரோ' இப்போதைக்கு வங்கிக் கணக்கு, காசோலை, கேட்போலை, பங்குச் சந்தை என எல்லா இடங்களிலும் கணக்கில் புழக்கத்திற்கு வந்துவிட்டது. பணமாக, சில்லரையாக 'ஈரோ' நாணயம் ஜனவரி 1, 2002-லிருந்து புழக்கத்திற்கு வரும். ஏற்கனவே புழக்கத்திலுள்ள ஜெர்மனியின் மார்க், பிரான்சின் ஃபிரான்க், இத்தாலியின் லியர் போன்ற அந்தந்த நாடுகளின் பணம் ஜூலை 1, 2002-லிருந்து முற்றாக அகற்றப்பட்டு 'ஈரோ' மட்டுமே புழக்கத்திலிருக்கும்.

ஈரோ, நடைமுறைக்கு வந்த உடனேயே பங்குச் சந்தையில் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. அமெரிக்காவின் டாலரையும், ஜப்பானின் யென்னையும் விடக் கூடுதல் மதிப்புப் பெற்றுள்ளது. அனைத்துலக பொது நாணயமாக உள்ள அமெரிக்காவின் டாலரை அகற்றுமளவு சக்திமிக்கதாக ஐரோப்பியக் கூட்டமைப்பின் ஈரோ பணம் மாறும் எனக் கூட்டமைப்பு நாடுகள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

ஏற்கனவே பொது வாணிபக் கொள்கை, பொது விவசாயக் கொள்கைகளை ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. 1992 டிசம்பரிலிருந்து தேசங்களுக்கு இடையேயான குடியுரிமை, சுங்க மற்றும் முதலீட்டுத் தடைகளை நீக்கியுள்ளன.

**பொது நாணயப் பரிமாற்றத்தோடு நிற்காமல், அரசியல் மற்றும் இராணுவ ஒற்றுமையையும் சாதிப்பது, ஒரு கூட்டரசின் கீழ் மேற்கு ஐரோப்பாவையே ஐக்கியப்படுத்துவது என்ற தொலை நோக்குத் திட்டத்துடன் ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகள் செயல்பட்டு வருகின்றன.**

சுருக்கமாகக் கூறினால், ஐக்கிய அமெரிக்க நாடுகள் போல, ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் ஒன்றை உருவாக்குவது என்பதே ஐரோப்பிய, கூட்டமைப்பை உருவாக்கியவர்களின் கனவு. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இந்த முழக்கம் முன்வைக்கப்பட்டது. அடிப்படை ஜனநாயக உரிமையே கூட பல ஐரோப்பிய நாடுகளில் இல்லாத நிலையில் இந்த முழக்கம் எவ்வளவு அபத்தமானது என்பதை அம்பலப்படுத்தி சாடி நிராகரித்தார் தோழர் லெனின்.

அதன்பின் அதே ஐரோப்பிய நாடுகள்தான் உலக மேலாதிக்கத்திற்காக, கொடூரமான இரண்டு உலகப் போர்களை நடத்தின. இதன் விளைவு பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உட்பட ஐரோப்பிய நாடுகள் தமது பொருளாதாரத்தையே பறி கொடுத்தன. அமெரிக்கா மிகப் பெரும் வல்லரசாக உருவானது. மறுபுறம் தோழர் ஸ்டாலின் தலைமையில் வலுமிக்க சோசலிச முகாம் ஒன்று உருவானது. இந்தக் காலகட்டத்தில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் ''கம்யூனிசத்திற்கு எதிராக ஐக்கிய ஐரோப்பிய நாடுகள்'' எனத் திரும்ப பிரச்சாரம் செய்து பார்த்து, முடங்கிப் போயினர்.

ஆனாலும், ஒருபுறம் அமெரிக்காவின் மேலாதிக்கமும் மறுபுறம் கம்யூனிச எழுச்சிகளும் ஐரோப்பியக் கூட்டமைப்பு முயற்சிகளை தொடரச் செய்தன. 1957-இல் ரோம் நகரில் பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் ஆகிய ஆறு நாடுகள் கூடி ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தை நிறுவின.

1970-களில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் இன்று வரை தீராமல் நாளும் பெருகி வருகின்றன. இந்த நெருக்கடிகளின் சுமை முழுவதையும் ஏகாதிபத்திய நாடுகள் ஏழை நாடுகளின் மீது திணித்து, இன்று வரை தப்பித்து வருகின்றன.

மறுபுறம், அமெரிக்க ஏகாதிபத்தியமும், 1960-களுக்குப் பின் அதிகார வர்க்க முதலாளித்துவ நாடாகச் சீரழிந்த ரசிய சமூக ஏகாதிபத்தியமும் ஐரோப்பாவை உலக மேலாதிக்கப் போட்டிக்கான குவிமையமாக்கின. மேற்கு ஐரோப்பாவை அமெரிக்காவும், கிழக்கு ஐரோப்பாவை ரசியாவும் முறையே நேட்டோ, வார்சா இராணுவ ஒப்பந்தங்களால், தங்களது போர்த் தேரில் கட்டி வைத்தன. இரண்டு வல்லரசுகளும் அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் ஐரோப்பாவில் குவித்தன.

இந்நிலையில் தங்களது சொந்த நலன்களுக்காக அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் தம்மை பலப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் திட்டமிட்டன. இதற்காக '80-ஆம் ஆண்டுகளில் துரித நடவடிக்கை எடுக்கத் தொடங்கின. இக்கட்டத்தில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் எண்ணிக்கை 12 ஆனது.

இக்கட்டத்தில்தான் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலி சோசலிசம் வீழ்ந்து, ரசியாவும் சிதைந்தது. வார்சா ஒப்பந்தம் காலாவதியானாலும் அமெரிக்காவின் நேட்டோ ஒப்பந்தம் நீடிக்கிறது. கிழக்கு ஜெர்மனி மேற்கு ஜெர்மனியுடன் இணைந்து, வலுமிக்க ஒன்றுபட்ட ஜெர்மனி தோன்றியது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் 1992-க்குப் பிறகு இன்று 15 நாடுகள்

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

### இந்தியா - பாக். கிரிக்கெட் போட்டி:

# சிவசேனாவின் தேசியவெறியும் பா.ஜ.க.வின் பசப்பலும்

• ஜனவரி 5. நள்ளிரவு. பத்திரிக்கைகள், தொலைக்காட்சி நிலையங்களுக்கு தகவல் தந்த, சிவசேனா குண்டர்கள் சிலர் டில்லி ஃபெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் கிரிக்கெட் ஆடுகளத்தைத் தோண்டி சேதப்படுத்தினர்.

• ஜனவரி 18. மாலை 2.20 மணி மும்பையிலுள்ள கிரிக்கெட் கட்டுப்பாட்டுத் தலைமையகத்திற்குள் நுழைந்த 25 சிவசேனா குண்டர்கள் அங்கிருந்த அனைத்தையும் அடித்து நொறுக்கிக் குவித்து விட்டனர். புருடென்சியில் கோப்பை, சென்ற ஆண்டு டாக்காவில் வென்ற சுதந்திரக் கோப்பை, பல வெள்ளித் தட்டுகள் என்று பரிசுப் பொருட்கள் எல்லாம் நொறுங்கி குப்பையில் கிடந்தன. கம்ப்யூட்டர்கள், டைப்ரைட்டர்கள், மேஜை நாற்காலிகள் என எதுவும் மிச்சமில்லை. சில பரிசுக் கோப்பைகள் திருடும் போய்விட்டன. சேதம் 15 லட்சத்திற்கும் மேல் என்றாலும், நாட்டின் மானம் மரியாதை காற்றில் பறந்து விட்டது என பத்திரிக்கைகள் வருந்துகின்றன.

கிரிக்கெட் தலைமையகத்தைச் சூறையாடிய சிவசேனாவினரை மாநில அரசு உடனே கைது செய்யவில்லை.

• டில்லியில் நடக்க உள்ள இந்தியா - பாகிஸ்தான் போட்டியின் போது விசப் பாம்புகள் பலவற்றை மைதானத்திற்குள் விடப் போவதாக முன்னாள் டில்லி சிவசேனா தலைவர் ஹரிகிஷன் ஜிந்தால் மிரட்டியுள்ளார். அதேபோல் சென்னையில் நடக்க உள்ள முதல் போட்டியைத் தடுக்க நாடு முழுதும் உள்ள சிவசேனாவினர் பார்வையாளர்களாக நுழைந்து கலகம் செய்யவர் என சவால் விடுகின்றனர்.

இவை, இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகளை நடக்க விடமாட்டோம் என பால்தாக்கரே கூறியதைத் தொடர்ந்து அவரது கட்சிக் குண்டர்கள் நடத்திய சட்டவிரோத நடவடிக்கைகள் / விடுத்த மிரட்டல்கள். மும்பய் தாக்குதலை நாடு முழுதும் கண்டிக்கும் போதும், போட்டி நிறுத்தப்படுவதுதான் தீர்வு என தாக்கரே கொக்கரிக்கிறார்.

இப்போது மட்டுமல்ல, ஏற்கனவே 1991-இல் ஒருமுறை சிவசேனா குண்டர்கள் மும்பை கிரிக்கெட் ஆடுகளத்தை சேதப்படுத்தி, போட்டி நடைபெறாமல் தடுத்துள்ளனர். பாகிஸ்தானும் தனது குழுவை விளையாட அனுப்பவில்லை.

கிரிக்கெட் என்று மட்டுமல்ல. பாகிஸ்தானை எதிர்ப்பதுதான் தேசபக்தி என சிவசேனா தொடர்ந்து செயல்படுகிறது.

• 1997-இல் மும்பையில் பாக். வீரர் பங்கேற்று நடைபெறவிருந்த ஸ்குவாஷ் உலக விளையாட்டுப் போட்டி சிவசேனா எதிர்ப்பால் நடைபெறவேயில்லை.

• பாகிஸ்தான் கஜல் பாடகர் குலாம் அலியின் இசை நிகழ்ச்சி ஏற்பாட்டின் போது சிவசேனா குண்டர்கள் அரங்கில் நுழைந்து கலவரம் செய்து நிகழ்ச்சி நடைபெறாமல் தடுத்து விட்டனர்.

இவற்றுக்கு சிவசேனா சொல்லும் காரணம், 'இந்தியாவைப் பிளவுபடுத்த பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. நாடு முழுதும் சதி செய்கிறது. காஷ்மீரின் ஒரு பகுதியை ஆக்கிரிமத்துள்ளதோடு, அங்கு அறிவிக்கப்படாத போர் நடத்துகிறது. இந்த எதிரி நாட்டவர்களை எப்படி இங்கு விளையாட அனுமதிக்கலாம்' என்பதே.

இன்று இந்திய நாட்டை வரையறையின்றி அன்னிய நாடுகள் கொள்ளையிட அனுமதிக்கும் பாரதீய ஜனதாவின் கூட்டாளியான இந்த சிவசேனா, என்ரானை ஏறக் கட்டுவதாக ஓட்டுப் பொறுக்கி இன்று அதே அமெரிக்க என்ரானுக்கு கைகட்டி மகாராட்டிரத்தில் சேவை செய்கிறது. உலக வர்த்தக நிறுவன உத்தரவுக்கு அடிபணிந்து பதிப்புரிமை சட்டத்தைத் திருத்தி நமது பாரம்பரிய உரிமைகளைத் தாரை வார்த்து விட்ட இந்த தேசத் துரோகக் கும்பலுக்கு தேசபக்தி பற்றிப் பேச எந்த தார்மீக உரிமையும் கிடையாது. இந்தப் பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகளுக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு, ஓட்டுப் பொறுக்குவதற்கான ஒரு வழி மட்டும்தான்.


13 ஆண்டுகளுக்குப் பின் கிரிக்கெட் போட்டித் தொடர் நடக்க உள்ள இப்போது கூட சிவசேனா பாக். குடனானா விளையாட்டை எதிர்க்கும் என நன்றாகத் தெரிந்தே மும்பையில் விளையாட திட்டமிடாமல் தவிர்த்தனர். இதன் மூலம் சிவசேனாவை சாந்தப்படுத்த முயன்றனர். ஆனாலும் சிவசேனா வெறி கொண்டு எதிர்த்தது.

கிரிக்கெட் விளையாட்டில் தேசிய வெறியைக் கலந்ததே பாரதீய ஜனதாவும் சிவசேனாவினரும்தான். இந்திய முஸ்லிம்களை அன்னியர் என முத்திரை குத்துவதற்காக விதிவிலக்கின்றி எல்லா முஸ்லிம்களும் பாகிஸ்தான் வெற்றி பெற்றால் சந்தோசப்படுகிறார்கள் என்ற ஒரு அவதூறுப் பிரச்சாரத்தைப் பல்லாண்டுகளாகச் செய்து வருகின்றனர். பெரும்பாலான சாதாரண மக்கள் கூட இந்த இந்து மதவெறிக் கருத்துக்கு பலியாகியுள்ளனர்.

பரவலாக இப்படி உருவாக்கப்பட்டுள்ள கருத்தைத் தனக்கான தேர்தல் ஆதாயமாக மாற்றிக் கொள்வதற்குதான், சிவசேனா இன்று கலவரத்தில் இறங்கியுள்ளது. கூட்டணிக் கட்சியான பாரதீய ஜனதாவோ, இவ்வளவு வெளிப்படையாக இறங்கவில்லை. சிவசேனாவின் வன்முறையை ஒடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மறுபுறம் பா.ஜ.க.வை இயக்கும் ஆர்.எஸ்.எஸ். பாசிஸ்டுகள் சிவசேனா நடவடிக்கை சரி என ஆதரிக்கின்றனர். இப்படி ஒரே பிரச்சினையில் ரெட்டை நாக்கில் பேசி, தனது இந்து மத வெறி பாசிச நடவடிக்கையை நிறைவேற்றிக் கொள்ளவும் செய்வார்கள்.

தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற கதையாக சிவசேனாவினர் செயல்படுகின்றனர். இஞ்சி தின்ற குரங்காக ஆட்டம் போடுகின்றனர். 'ஃபயர்' என்ற இந்தி திரைப்பட எதிர்ப்பிலாகட்டும்,

சிவசேனா குண்டர்களால் தாக்கிச் சூறையாடப்பட்ட மும்பய் நகரிலுள்ள கிரிக்கெட் கட்டுப்பாடு தலைமையகம்.





படிப்பகம்

www.padippakam.com

ஓவியர் உசேன் எதிர்ப்பிலாகட்டும் இவை அனைத்திலும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு பீதியூட்டுகின்றனர். உசேன் இந்துமதக் கடவுளர்களை நிர்வாணமாக வரைந்தார் என எதிர்ப்புத் தெரிவித்த போது, 'அப்படி சிந்திக்கும் மூளையின் செயல்பாட்டை நிறுத்த வேண்டும்' என அப்பட்டமாகவே கொலை வெறியைத் தூண்டி எழுதினார், பால் தாக்கரே. அப்படி வரைந்த கை விரல்களை உடைத்தெறிய வேண்டும் என்றார்.

இவை அனைத்தும் வெறுமனே வெறித்தனமாக எழுதி, செய்வதல்ல. மாறாக திட்டமிட்ட முறையில், இந்து மத வெறியைத் தூண்டி ஓட்டுப் பொறுக்கும் நரித்தனமாகவே செய்கிறார் பால் தாக்கரே. இந்தியா - பாகிஸ்தான் விளையாட்டை எதிர்க்கும் சிவசேனாவினர் செயல்பாடுகள் பரவலான மக்களிடையே எதிர்ப்பையும் வெறுப்பையும் இக்கணத்தில் உருவாக்கலாம். ஆனால் அப்படி எதிர்ப்பவர்கள் அரசியல் ரீதியாகப் புரிந்து

**இந்தியாவிற்கும், பாகிஸ்தானிற்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வண்ணம் அமையும் சிறு சிறு நிகழ்ச்சிகளைக் கூட, இந்து மதவெறியர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை.**

கொண்டு சிவசேனாவின் இச்செயல்களை எதிர்ப்பதில்லை. விளையாட்டை எதிர்க்கலாமா என்ற பொதுவான முறையில்தான் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அந்த எதிர்ப்பைக் கூட, சிவசேனா தனது வன்செயல் மூலம் ஒழித்து விடுகிறது.

சிவசேனா - பா.ஜ.க. கூட்டணி சுமார் 4 ஆண்டுகள் மகாராட்டிரத்தில் ஆண்டாகி விட்டது. தேர்தல் வாக்குறுதிகளான 'அத்தியாவசியப் பண்டங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரே விலையில் கிடைக்கும்; வேலையற்ற 27 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு; குப்பத்து வாசிகளுக்கு இலவச மாடி வீடுகள்; ஏழைகளுக்கு 1 ரூபாயில் சத்துணவு;...' இப்படியான கவர்ச்சித் திட்டங்களில் ஒன்றைக் கூட சிவசேனா அரசாங்கம் இதுவரை நடைமுறைப் படுத்தவில்லை. மார்ச் 2000-இல் திரும்ப தேர்தல் வரப்போகிறது.

அதற்காக இப்போதிருந்து, இந்து மத வெறியைத் தூண்டி, ஓட்டுப் பொறுக்கும் அரசியல் ஆதாயத்திற்கு பால் தாக்கரே திட்டமிடுகிறார். இந்தியா - பாகிஸ்தான் விளையாட்டு எதிர்ப்பில் இந்துமத வெறி, தேசிய வெறி பிணைக்கப்பட்டுவிட்டது. தமது கூட்டாளி பாரதீய ஜனதா, நரபலி நாயகன் அத்வானியின் சமாதானத்திற்குப் பிறகு சிவசேனா பின்வாங்கியிருப்பது கூட தற்காலிகமானதுதான்.

● மாரி

**தலையங்கம் தொடர்ச்சி**


கொண்டதாக ஐரோப்பியக் கூட்டமைப்பாக வளர்ந்துள்ளது. 2002-இல் பொது நாணயம் பிரச்சினையின்றி புழக்கத்திற்கு வந்து, வெற்றி பெற்றுவிட்டால், ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகளின் எண்ணிக்கை 20-க்கும் மேலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு அந்த நாடுகள்

1. நிதிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு நாடுமே தனது பொருளாதாரத்தை அதிக அளவு நெருக்கடியின்றி கட்டிக் காக்க வேண்டும்.

சுருக்கமாக, இதன் பொருள் ஏக போக தொழில் நிறுவனங்களின் வரம்பற்ற கொள்ளைக்கும் சுரண்டலுக்கும் முழு அனுமதி தரும்; அதே நேரம் மக்கள் நலத் திட்டங்களைக் கை விடுவது, விவசாயிகளுக்கான மானியங்களை வெட்டிச் சுருக்குவது என்பதுதான்.



ஜெர்மன்-ஃபிராங்க்ஃபர்ட் நகரிலுள்ள ஐரோப்பியக் கூட்டமைப்பின் மைய வங்கி ஈரோ நாணய வரவை அறிவித்து நடத்திய விழா.

பிரான்ஸ் இதை நடைமுறைப்படுத்த முயன்றது. நாட்டின் வரவு செலவு பற்றாக்குறையை மொத்த தேசிய வருவாயின் 3 சதவீதத்திற்குள் வைக்க வேண்டும் என்பதற்காக எடுத்த பொருளாதார நடவடிக்கையால் 1997-இல் ஆட்சியிலிருந்த டிகால் கட்சி தோற்றுப் போனது. ஐரோப்பிய நாட்டு ஆலைகளில் தொழிலாளருக்கு வேலை உத்தரவாதம் உள்ளது. 1995-இல் பிரான்சில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் வேலைக்கு உத்திரவாதமற்ற நிலை தோன்றவே போராட்டம் வெடித்தது. பிரான்சு நாடே நிலை குலைந்தது. ஏறக்குறைய கூட்டமைப்பு நாடுகளனைத்திலும் மானியக் குறைப்புக்கு எதிராக விவசாயிகள் போராட்டம் வெடித்துக் கிளம்பின. இதே போல ஜெர்மனியில் நிலக்கரிச் சுரங்க தொழிலாளர் போராட்டம் என பல போராட்டங்கள் இந்நாடுகளில் தொடர்ந்தன.

இன்று பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கும் பண மதிப்பு வீழ்ச்சியைத் தடுப்பதற்கும் இந்த நாடுகள் சுதந்திரமான முறையில் நடவடிக்கை எடுக்க முடியாது. ஐரோப்பியக் கூட்டமைப்பு முடிவின் படியான பொருளாதாரக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுதான் தீர்வு காண வேண்டும். ஏற்கனவே கூட்டமைப்பில் முன்னோடியாகச் செயல்படும் பிரான்சு, இக்கட்டுப்பாடுகளைக் கறாராகக் கடைப்பிடிக்க இயலாது என எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இன்றைய ஐரோப்பியக் கூட்டமைப்புக்கு ஒன்றுபட்ட ஜெர்மனி தலைமை தாங்குகிறது. இதில் இணைந்திருந்தாலும் பிரிட்டன், தனது தனித்துவத்தை, நாணயத்தைப் பாதுகாக்கவும், ஈரோ நாணயம் நிலை பெற்றபின் அதில் சேரலாம் என்ற முடிவிலும் பொது நாணயத் திட்டத்திலிருந்து விலகி நிற்கிறது. மக்கள் நலத் திட்டங்களுக்கு ஆபத்து வரலாம் என்பதால் டென்மார்க், ஸ்வீடன் நாட்டு மக்கள் இன்று பொது நாணய திட்டத்தில் சேர எதிர்ப்பு தெரிவித்ததால், அந்நாடுகள் இணையவில்லை.

அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிராக தன்னை வலுப்படுத்தவும், உலக அளவில் அதற்குப் போட்டியாக தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தவுமே ஜெர்மன் தலைமையிலான ஐரோப்பியக் கூட்டமைப்பு உருவாகியுள்ளது. காலனிய கால இழந்த சொர்க்கத்தை இன்றைய அமெரிக்க வழியில் நிலை நாட்டும் முயற்சிதான் இது. இந்நாடுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே இதைச் சாதிக்க முடியாது என்பதாலேயே கூட்டமைப்பாக ஒன்றிணைந்துள்ளன.

இப்பொருளாதார ஒருங்கிணைப்பு அரசியல் இராணுவ ஒருங்கிணைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். போஸ்னிய பிரச்சினையிலும், ஈராக் விவகாரத்திலும் இந்நாடுகளிடையே ஒருமித்த கருத்து இல்லாதது, அரசியல் ஒருங்கிணைப்பையே கேள்விக்குள்ளாகிறது.

இந்நிலையில் இன்றைய பொது நாணயமும் பொருளாதார ஒருங்கிணைப்பும் இந்நாடுகளின் பன்னாட்டு, தேசங்கடந்த தொழிற் கழகங்கள் உலக அளவில் பொருளாதார மேலாதிக்கம் செலுத்த உதவலாம். அந்த வகையில் இன்று ஒன்றுபட்டுள்ளனர். ஆதிக்கமும் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

இப்பொருளாதார மேலாதிக்கத்தைச் சுவைப்பதற்கே கூட அந்தந்த நாடுகளின் தொழிலாளர்கள் மிக மோசமாக சுரண்டப்பட்டு அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதவெறியாட்டத்தை இனியும் பொறுப்பதா?

**பாபர் மசூதி இடிப்பு, மும்பை, கோவை முசுலீம் எதிர்ப்புக் கலவரங்கள், குஜராத்தில் கிறித்தவர்கள் மீது தாக்குதல், ஒரிசாவில் பாதிரியார் எரிப்பு என இந்தியாவைப் பிணக்காடாக மாற்றி வரும் இந்து மதவெறியர்களை, தெருவில் இறங்கி விரட்டியடிப்பதன் மூலம் மட்டுமே வீழ்த்த முடியும்!**

**நா**யைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அதன் குணம் மாறாது என்பார்கள்; அதுபோலதான் இந்து மதவெறியர்களும். முசுலீம்களை, "அந்நியக் கைக் கூலிகள்" "தேச விரோதிகள்" என்றும், "முசுலீம்களால் இந்து மதத்திற்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து" என அவதூறுப் பிரச்சாரம் செய்து, முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறிக் கலவரங்களை நடத்தி ஆட்சியைப் பிடித்துள்ள இந்து மதவெறியர்கள், இப்பொழுது தங்களின் தாக்குதல் முனையை கிறித்தவர்களை நோக்கித் திருப்பியிருக்கிறார்கள். கடந்த கிறிஸ்துமஸ் தினம் தொடங்கி, கிட்டதட்ட ஒரு வார காலம் குஜராத் மாநிலம் டாங்ஸ் மாவட்டத்தில் வாழும் ஆதிவாசி கிறித்தவர்கள் மீது, இந்து மதவெறியர்கள் அரசு அதிகாரத்தின் துணையோடு நடத்திய தாக்குதல்கள் மூலம், "இந்து மதவெறி பயங்கரவாதம் தான் தங்களது ஒரே அரசியல் வழி" என்பதை மீண்டுமொருமுறை தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

தேர்தல் காலத்தில் "கலவரமற்ற இந்தியாவை உருவாக்குவோம்" என பா.ஜ.க. கொடுத்த மோசடி வாக்குறுதியும், "மைய ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.க., இனி பொறுப்புள்ள கட்சியாக நடந்து கொள்ளும்" எனப் பதவிப் பித்தர்கள் வை.கோ.வாலும், இராமதாசாலும், வேறு சிலராலும் செய்யப்பட்டு வந்த மோசடிப் பிரச்சாரத்தின் சாயமும் வெகு சீக்கிரமாகவே வெளுத்துவிட்டது.

★☆★

**கு**ஜராத் மாநிலத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள மலை மாவட்டம் டாங்ஸ். மேற்குத் தொடர்ச்சி மலை இம்மாவட்டத்தில்தான் தொடங்குகிறது. போக்குவரத்து வசதிகள் ஏதுமற்ற இம்மலை மாவட்டத்தின் 98 சதவீதப் பகுதி "பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி"யாக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இம்மலை மாவட்டத்தின் மொத்த மக்கட் தொகை 1,44,091; இவர்களுள் 97 சதவீதத்தினர் மலைவாழ் மக்கள்.

கிட்டதட்ட நூறாண்டுகளுக்கும் மேலாகவே இம்மலை மாவட்டத்தில் கிறித்தவத் தன்னார்வக் குழுக்கள் இயங்கி வருகின்றன; அவை, பள்ளிக் கூடங்கள், தொழிற் பயிற்சி நிலையங்கள், மாணவர் விடுதிகள், மருத்துவமனைகளை நடத்தி வருகின்றன. கிறித்தவத் தன்னார்வக் குழுக்களின் உதவியைப் பெற்று வரும் மலைவாழ் மக்களுள், 7,824 பேர்தான் (91-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) கிறித்தவ மதத்தைத் தழுவியுள்ளனர். தற்போதைய நிலவரத்தின்படி, 1,70,000 மலைவாழ் மக்களில், கிட்டதட்ட 25,000 பேர் கிறித்தவ மதத்தைத் தழுவியிருக்கலாம் என கிறித்தவத் தன்னார்வக் குழுக்கள் கூறுகின்றன.

டாங்ஸ் மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களை ஓட்டு வங்கியாக மாற்றுவதற்காக உள்ளே நுழைந்த இந்து மதவெறி அமைப்புகள், அதற்காக, கிறித்தவத் தன்னார்வக் குழுக்களைப் போல எந்தச் சேவையிலும் ஈடுபடவில்லை. பார்ப்பன - உயர் சாதியினருக்குச் சேவை செய்வதற்காகவே, சூத்திர - சண்டாள சாதிகளை உருவாக்கி வைத்திருக்கும் இந்து மதத்திற்கும், மனித குல சேவைக்கும் வெகு தூரம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மாறாக, இந்து மதவெறி அமைப்புகளான பஜ்ரங் தள்ளும், விசுவ இந்து பரிசத்தும், கிறித்தவ தன்னார்வக் குழுக்கள், டாங்ஸ் மலைவாழ் மக்களுக்குச் சலுகைகளை வழங்கி, கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவதாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கின.

தங்களது உற்பத்தியோடும், வாழ்க்கையோடு இணைந்து கிடக்கும் இயற்கையை, சடங்குகள் செய்து வழிபடும் மரபு கொண்டவர்கள் ஆதிவாசி - மலைவாழ் மக்கள். அவர்களுக்கும், இந்து மதத்திற்கும் ஒட்டும், உறவும் இருந்ததே கிடையாது. கிறித்தவ மதத்தைத் தழுவிய மலைவாழ் மக்கள் கூட, இயற்கையை வழிபடும் இச்சடங்குகளைப் புறக்கணிப்பது கிடையாது. கிறித்தவ மதத்தைத் தழுவாத மலைவாழ் மக்களை இந்துக்கள் என நயவஞ்சகமாக முத்திரை குத்துவதன் மூலம், ஒரே பழங்குடி இனத்தைச் சேர்ந்த சகோதரர்களிடையே வெறுப்பையும், பகையையும் தூண்டிவிட்டு, அரசியல் ஆதாயம் அடையத் துடிக்கின்றன, இந்து மதவெறி அமைப்புகள்.

விசுவ இந்து பரிசத் - பஜ்ரங் தள்ளின் பினாமி அமைப்பான இந்து விழிப்புணர்வு இயக்கம், (ஹிந்து ஜாக்ரண் மஞ்ச்) டாங்ஸ் மாவட்டத்திலுள்ள ஆவா எனும் சிறு நகரத்தில் டிசம்பர் - 25 கிறிஸ்துமஸ் தினத்தன்று மத மாற்றத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தது. இந்த ஊர்வலத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என தெற்கு குஜராத் மலைவாழ் கிறித்தவ நலச் சங்கம் நான்கு முறை முறையிட்டு இருந்ததை மாவட்ட நிர்வாகம் முற்றிலுமாக அலட்சியப்படுத்திவிட்டது. டாங்ஸ் மாவட்ட ஆட்சியாளர் பரத் ஜோஷி இந்து மதவெறி ஊர்வலம், ஆவா நகரில் கிறித்தவர்கள் நிறைந்து வாழும் பகுதியின் வழியாகச் செல்லுவதற்கு அனுமதி அளித்தார்.

கிறிஸ்துமஸ் தினத்திற்கு முதல் நாள், கிறித்தவ கன்னியாஸ்திரிகளை வக்கிரமாகக் கேவலப்படுத்தியும், கிறித்தவ மத போதகர்களைத் தாக்கியும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. ஊர்வலத்தின் பொழுது, இந்து மதவெறியர்கள் கலவரத்தைத் தூண்டிவிடும் வண்ணம் "இந்துவே விழி; கிறித்தவனே ஓடிப்போ" எனக் கோஷமிட்டனர். ஊர்வலத்தின் முடிவில், கிறித்தவர்கள் குடியிருப்புப் பகுதியின் அருகே நடந்த பொதுக் கூட்டத்தில், பஜ்ரங் தள்ளின் மாநிலத் தலைவர் தனுபாய் பவார், கிறித்தவர்களை இம்மாவட்டத்தில் இருந்தே துரத்தியடிப்போம் என வெறியூட்டினார்.

இப்பொதுக்கூட்டம் முடிந்த பின்னர் இந்து மதவெறியர்கள் கும்பல் கும்பலாகப் பிரிந்து சென்றனர். ஒரு கும்பல் நேராக வட இந்திய திருச்சபை தேவாலயத்திற்குச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த கிறிஸ்துமஸ் தின ஆராதனையைக் குலைப்பதற்காக, தேவாலயத்தின் வெளியில் நின்று ஊளையிட ஆரம்பித்தது. இதையடுத்து, இந்து மதவெறிக் கும்பலுக்

இந்து மதவெறியும், கொலைவெறியும் கொண்ட பஜ்ரங் தள் குண்டர்கள், சூரத்தில் கிறித்தவர்களுக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com



இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்ட ஜார் சன் கிராமத்தைச் சேர்ந்த கிறித்தவப் பெண்.

கும், கிறித்தவர்களுக்கும் இடையே நடந்த மோதலில், மூன்று கிறித்தவ இளைஞர்கள் காயமடைந்தனர்; தேவாலயத்திற்கு அருகில் இருந்த கிறித்தவர்களுக்குச் சொந்தமான கடைகளும், வாகனங்களும் இந்து மதவெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

இதே சமயத்தில் இந்து மதவெறியூட்டப்பட்ட இன்னுமொரு கும்பல், ஆவா நகரில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நடந்து வரும் "டீப் தர்ஷன்" எனும் பள்ளியைத் தாக்கியது. அப்பள்ளியில் ஆசிரியைகளாக வேலை பார்த்து வரும் கன்னியாஸ்திரிகளைக் கற்களைக் கொண்டு தாக்கிய அக்கும்பல், அப்பள்ளியின் சன்னல்களையும், கதவுகளையும், தண்ணீர்க் குழாய்களையும் அடித்து நொறுக்கியது. வேறொரு கும்பலோ கடை வீதியில் புகுந்து, கிறித்தவர்களைத் தாக்கியது.

கிறிஸ்துமஸ் தினத்தன்று இரவில், டாங்ஸ் மாவட்டத்தில் சுபிர் எனுமிடத்திலுள்ள நவ ஜியோத் உயர்நிலைப் பள்ளியை, நூற்றுக்கும் மேலான பஜரங்தள் குண்டர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கிச் சேதப்படுத்தினார்கள். மின்சார இணைப்பைத் துண்டித்துவிட்டு அப்பள்ளியைத் தாக்கிய அக்கும்பல், அப்பள்ளியின் ஒரு கட்டிடத்தின் மீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக் கொளுத்தியது; இச்சூறையாடலில் அப்பள்ளிக்குச் சொந்தமான ஜீப்பும், மோட்டார் சைக்கிளும் தீக்கிரையாயின.

ஆவா நகரைச் சுற்றியுள்ள ஜம்லபாடா, காட்வி, திவான் தெம்ருன், மடக்காடி, பாதல்காடி எனப் பல ஊர்களிலும் கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் நடத்தி வரும் பள்ளிகளும், கிறித்தவர்களின் வீடுகளும் தாக்கப்பட்டன; தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

மறுநாள் இரவு, இந்து மதவெறிக் கும்பலொன்று வாகி கிராமத்திலுள்ள தேவாலயத்தைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு, வனத்துறைக்குச் சொந்தமான ஜீப்பில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டது. கரடியாம்பாவிலும், பெஷ்துனிலும் இரு தேவாலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

டிசம்பர் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்களிலும் முல்சோந்த், லஹன் காட்மால், பர்தா, பரிபாடா, ராவ்சோந்தி, கரேன்ஜ்பாடா, பிபால்டகாத், கௌஜன் எனப் பல்வேறு கிராமங்களில், கிறித்தவ தேவாலயங்கள் இந்து மதவெறியர்களால் தாக்கப்பட்டன. டாங்ஸ் மாவட்டத்திற்கு அருகிலுள்ள சூரத் மாவட்டத்தைச் சேர்ந்த வையராவில் இரு தேவாலயங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதோடு, மற்றுமொரு தேவாலயத்தின் உச்சியில் விசுவ இந்து பரிஷத்தின் கொடி பறக்கவிடப்பட்டது.

★☆★

**ம**த்தியப் பிரதேசத்தில் கிறித்தவ கன்னியாஸ்திரிகள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட சம்பவத்தை, கோபம் கொண்ட தேச பக்த இளைஞர்களின் செயலாக வக்கிரமாக வருணித்த இந்து மதவெறி பாசிஸ்டுகள், குஜராத்தில் நடத்திய சமூக அமைதிக்கு எதிரான இந்த அட்டூழியத்தை, "கிறித்தவ தன்னார்வக் குழுக்களின் கட்டாய மத மாற்றத்திற்கு எதிரான இந்துக்களின் அடங்கிக் கிடந்த ஆத்திரத்தின் வெளிப்பாடாக"க் கூறுகின்றனர். கிறிஸ்துமஸ் தினம் தொடங்கி, தொடர்ச்சியாக ஏழு நாட்கள், அடுத்தடுத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களின் வீச்சையும், தாக்குதல் தொடுக்கப்பட்ட விதத்தையும் மேலோட்டமாகப் பார்க்கும் எவரும் கூட "இந்து" மலைவாழ் மக்களின் தன்னெழுச்சியான தாக்குதல் என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

டாங்ஸ் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியாளர் பரத் ஜோஷி, இந்து மதவெறியர்கள் கிறிஸ்துமஸ் தினத்தன்று ஊர்வலம் நடத்த அனுமதி கொடுத்ததோடு, ஊர்வல மேடைக்கே நேரில் சென்று, இந்து மதவெறியர்கள் அணிவித்த மாலை மரியாதைகளை ஏற்றுக் கொண்டார். இந்து மதவெறி அமைப்பின் உறுப்பினரைப் போல, மேடையில் அமர்ந்து கொண்டு, இந்து மதவெறியர்கள் மலைவாழ் கிறித்தவர்களை கீழ்த்தரமாகத் தாக்கிப் பேசியதையும் கேட்டு இரசித்ததன் மூலம், மதவெறியர்களின் உணர்வுகளை மறைமுகமாகத் தூண்டி விட்டுள்ளார்.

பாபர் மசூதியை, கைவிடப்பட்ட ஒரு கட்டிடம் என இழிவாகப் பேசியதைப் போலவே, டாங்ஸ் மாவட்டத்தில் கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் நடத்தி வரும் தேவாலயங்களை வழிபாட்டுத் தலங்களே இல்லை எனச் சாதிக்கின்றன, இந்து மத வெறி அமைப்புகள். டாங்ஸ் மாவட்டத்தின் போலீசு கண்காணிப்பாளராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ள ராஜன் கெய்க்வாட், "கிறித்தவ தன்னார்க் குழுக்கள், தீக்கிரையாக்கப்பட்ட / தாக்கப்பட்ட தேவாலயங்கள் குறித்து போலீசிடம் புகார் கொடுத்துள்ள போதிலும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது எங்களுக்குக் கடினமானது. ஏனெனில், சட்டப்படி இவைகளை தேவாலயங்கள் எனக் கூற முடியாது. அவைகள், தற்காலிகக் கூடாரங்களாகவோ, கூரைக் கொட்டகைகளாகவோ தான் உள்ளன" எனக் கூறுகிறார்.

அயோத்தியில், பாபர் மசூதி வளாகத்தில் சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ள இராமர் கோயிலைக் கூட தற்காலிகக் கூடாரமாகதான் இந்து மதவெறியர்கள் அமைத்துள்ளனர். இதே 'நியாயத்தை'க் கூறி, தற்காலிகக் கூடாரத்தில் நடந்து வரும் இராமர் கோயிலை இடித்துத் தள்ளிவிட இந்து மத

**இ**ந்து மதவெறி பாசிசம் எத்துணை கொடூர மானது என்பதற்கு இன்னுமொரு உதாரணம் தான் ஒரிசா மாநிலத்தில் கிறித்தவ பாதிரியார் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம். அம்மாநிலத்திலுள்ள மனோகர்பூர் கிராமத்தில் நடந்த கிறித்தவ முகாமில் கலந்து கொள்ள வந்த பாதிரியார் கிரகாம் ஸ்டூவேர்டும், அவரது இரு மகன்கள் பிலிப்ஸ், திமோதியும், தங்களது ஜீப்பில் உறங்கிக் கொண்டிருந்த பொழுது, அதிகாலை நேரத்தில், மனோகர்பூரைச் சுற்றி வளைத்த பஜ்ரங்தள் குண்டர்கள், முதலில் அக்கிராமத்தின் தகவல் தொடர்புகளைத் துண்டித்தனர்; பின்னர், அக்கிராம மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாதபடி, ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஆயுதந் தாங்கிய இந்து மதவெறிக் குண்டர்களைக் காவலுக்குப் போட்டுவிட்டு, பாதிரியாரும், அவரது இரு மகன்களும் உறங்கிக் கொண்டிருந்த ஜீப்பிற்கு பெட்ரோல் ஊற்றி தீ வைத்தனர். எரியும் ஜீப்பில் இருந்து அம்மூவரும் தப்பித்து விடாதபடி, ஜீப்பைச் சுற்றி நின்று கொண்ட இந்து மதவெறியர்கள், அம்மூவரும் கதறக் கதற எரிந்து, கருகி, சாம்பலானபின்தான் மனோகர்பூரை விட்டுத் தப்பிச் சென்றனர்.

எரிந்து உருக்குலைந்துபோன ஜீப். (உள்படம்) பாதிரியார் ஸ்டூவர்ட், தனது மனைவி மற்றும் மகனுடன்.



www.padippakam.com

# சாதியும் மத மாற்றமும்

"தங்கள் வாழ்வில் என்றாவது விடிவு பிறக்காதா?'' என ஏங்கிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களுக்கு ''ஆத்ம சாந்தி'' கொடுக்கும் போதை மருந்தாகவும், கருத்தியில் அடக்குமுறைக் கருவியாகவும் மதம் ஆளும் வர்க்கங்களால் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையாயினும், சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில், ஒரு தனி நபர், தான் நம்பிக்கை கொள்ளும் மதத்தைப் பின்பற்றவும், ஒரு மதத்தில் இருந்து வேறொரு மதத்திற்கு மாறிக் கொள்ளவும் உரிமையுண்டு. மதம் மாறும் சனநாயக உரிமையை இந்திய மக்களிடமிருந்து பறித்து விட வேண்டும் என்பதில் இந்து மத வெறி அமைப்புகள், அவை பிறந்த காலந்தொட்டே முனைப்புக் காட்டி வருகின்றன. மதம் மாறிச் சென்றவர்களை, மீண்டும் இந்து மதத்தில் இணைத்துக் கொள்ளும் ''சுத்தி'' இயக்கத்தையும் நீண்ட காலமாகவே நடத்தி வருகின்றன.

தற்காலத்தில் இந்து மதம் என்றழைக்கப்படும் பார்ப்பனிய சனாதன தர்மத்திற்கும், பிற மதங்களுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. இந்து மதம், பிற மதங்களைப் போன்று ஒருபடித்தானதன்று. சாதிய அடுக்குகள்தான் இதன் அடிப்படை. இன்று இந்து என்று அழைக்கப்படுபவர்களுக்கு / அழைத்துக் கொள்ளுபவர்களுக்கு, "இந்துவாக இருப்பதென்பதே இறுதியான சமூக வகைப் பிரிவு அல்ல. இறுதியான வகைப் பிரிவு என்பது சாதி; உபசாதி இருக்குமானால் உபசாதி.''

பார்ப்பன சனாதனத்தின் நான்கு வகை வருணங்களுக்கும் அப்பால் வைக்கப் பட்ட, தாழ்த்தப்பட்டோரும், ஆதிவாசிப் பழங்குடியினரும்தான் சமீப ஆண்டுகளில் பெருமளவில் "இந்து" மதத்தில் இருந்து வெளியேறி, கிறித்தவ மதத்தையோ, புத்த மதத்தையோ, முசுலீம் மதத்தையோ தழுவியுள்ளனர். தீண்டாமை, இந்து மதத்தில்



கிறித்தவ மதத்தைத் தழுவிய மலைவாழ் மக்களை, இந்துவாக மாற்றும் நரித்தனம்.

இருந்து அவர்கள் வெறியேறுவதை அவசியம் ஆக்குகிறது. இவர்களின் மதமாற்றம், இந்து மதத்தின் அடிப்படையையே ஆட்டங்காணச் செய்வதால்தான், இந்து மதவெறியர்கள் மதமாற்றத்தைத் தடை செய்ய வேண்டுமெனக் கூச்சல் போடுகிறார்கள்.

இந்துமதவெறியர்கள் தீண்டாமையை எதிர்க்க மாட்டார்கள்; அதை, "க்ஷேமகரமானது'' என்பார்கள். அதே சமயம், தாழ்த்தப்பட்டோரும், பழங்குடி இன மக்களும் தீண்டாமையில் இருந்து தப்பித்துச் செல்லும் வழியாக மத மாற்றத்தைப் பார்ப்பதை அடைத்துவிடத் துடிக்கிறார்கள். மத மாற்றத்தைத் தடை செய்வதை, தாழ்த்தப்பட்டோரையும், பழங்குடி இன மக்களையும் சாதிய ஒடுக்குமுறைக் கட்டமைவில் இருத்தி வைக்கும் வழிகளுள் ஒன்றாகக் காணுகின்றன இந்து வெறி அமைப்புகள். சாதிய ஒடுக்குமுறைக் கட்டமைவு, இந்தியாவைப் பீடித்துள்ள நோய் என்பதால், சாதிய ஒடுக்கு முறையை எதிர்ப்போரும், தனிநபர் சுதந்திரத்தையும், சனநாயகத்தையும் விரும்பும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், இந்து மதவெறியர்கள் மதமாற்றத்தைத் தடை செய்யக் கோருவதை எதிர்த்தேயாக வேண்டும்.

கிறித்தவர்களும், முசுலீம்களும்தான் மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்; இந்துமத நிறுவனங்கள் மத மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனக் கூறி, இந்து மதத்தை ஏதோ உயர்ந்த குணாங்களும், குறிக்கோளும் கொண்ட மதமாகச் சித்தரிக்க முயலுகிறார்கள் இந்து மதவெறியர்கள். இந்துக்களில், சிறுபான்மையான பார்ப்பன, சத்திரிய, வைசியரைத் தவிர, பெரும்பான்மையான சூத்திர சாதிகளைச் சேர்ந்தவர்களெல்லாம் வேசி மகன் எனக் குறிப்பிடும் இந்து மதத்தில், சுயமரியாதையுள்ள எவனும் இணையத் துணிய மாட்டான் என்பதே உண்மை.

வெறியர்கள் அனுமதிப்பார்களா? சட்ட விரோதமாகக் கட்டப்பட்டுள்ள அத்தற்காலிகக் கூடாரத்திற்கு அரசு இயந்திரமே பாதுகாப்பு கொடுக்கிறது. ஆனால், கிறித்தவ தேவாலயங்களைச் சட்ட விரோதமாக இடித்துத் தள்ளிய இந்து மதவெறிக் காலிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதாம்!

இத்தாக்குதல் தொடர்பாக 70 இந்துக்களைக் கைது செய்திருப்பதாக மாநில அரசு கூறினாலும், அவர்கள் அனைவரையும் கைது செய்த மறுநிமிடமே பிணையில் விடுவித்துவிட்டது. இதனை, மாநில அரசு இயந்திரம் இந்து மதவெறி ஆட்சியாளர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகப் பார்ப்பது பிரச்சினையை எளிமைப்படுத்துவதாகும். மாறாக, இவை, அரசு இயந்திரம் இந்துமயமாக்கப்பட்டு வருவதன் வெளிப்பாடாகும்.

★ ☆ ★

குஜராத் மாநில பா.ஜ.க. அரசும், அதிகார வர்க்கமும் இந்து மதவெறியர்களின் அட்டூழியங்களுக்கு வெளிப்படையாகவே ஆதரவாகச் செயல்பட்டபொழுது, பா.ஜ.க.வின் மையத் தலைமை கிறித்தவர்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல்களைக் கண்டிப்பதாக நாடகமாடியது. இரத யாத்திரைகளின் பொழுதும், முசுலீம் எதிர்ப்பு பம்பாய்க் கலவரத்தைத் தூண்டிவிட்டு நடத்தியும் ஆயிரக்கணக்கான முசுலீம்களைப் படுகொலை செய்த மதவெறி கிரிமினல் அத்வானி, கிறித்தவர்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலைக் கண்டிக்கிறார் என்றால், அது நயவஞ்சகமானதில்லையா? வாஜ்பாயி, ஒரு புறம் தாக்குதலைக் கண்டிக்கும் நியாயவானாகத் தன்னைக் காட்டிக் கொண்டு, மறுபுறம், இத்தாக்குதல்களுக்கும், மாநில பா.ஜ.க. அரசிற்கும், விசுவ இந்து பரிசத், பஜரங் தள்ளிற்கும் எவ்விதச் சம்மந்தமும் இல்லை என அறிக்கை விடுகிறார். மேலும், ''மத மாற்றத்தைத் தடை செய்வது தொடர்பாக தேசிய அளவில் விவாதம் நடத்தப்பட வேண்டும்'' எனத் தனது இந்து சாம்ராஜ்யக் கனவையும் வெளிக் காட்டிக் கொண்டு விட்டார்.

''முசுலீம் ரெண்டு, மூணு பொண்டாட்டி கட்டிக்கிறான்; அவன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதில்லை. இதனால், இந்தியாவே முசுலீம் நாடாக மாறப் போகிறது'' என்று முசுலீம்களுக்கு எதிராகப் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டதைப் போலவே, ''கட்டாய மத மாற்றத்தின் காரணமாக 2,000-ஆம் ஆண்டுக்குள் குஜராத் மாநிலமே கிறித்தவர்களின் மாநிலமாக மாறிவிடும்'' என்ற பொய்ப் பிரச்சாரத்தை நடத்தி, கிறித்தவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை இந்து மதவெறியர்கள் நியாயப்படுத்துகின்றனர்.

ஆனால், உண்மையென்ன? டாங்ஸ் மாவட்டத்தில் 1981-இல் 1,10,522 ஆக இருந்த இந்துக்களின் எண்ணிக்கை, 1991-இல் 1,33,828 ஆக உயர்ந்துள்ளது. இதே கால கட்டத்தில், கிறித்தவர்களின் எண்ணிக்கை 1514-லிருந்து 7,824 ஆக உயர்ந்தது. டாங்ஸ் மாவட்டத்தில் இந்துக்களின் எண்ணிக்கையைவிட கிறித்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், வளர்ச்சி சதவீதம் அதிகமாகும். டாங்ஸ் மாவட்டத்தைப் போலவே, பழங்குடியினர் அதிகமாக வாழும் சூரத், பில்சார், பரோடா மாவட்டங்களிலும் கிறித்தவர்களின் வளர்ச்சி சதவீதம் அதிகமாகத்தான் உள்ளது.

என்றாலும் கூட, இந்து மதவெறியர்கள் ஊதிப் பெருக்குவதைப் போல, குஜ



படிப்பகம்

www.padippakam.com

ராத் கிறித்தவர்களின் மாநிலமாக மாறிவிடுவதற்கு அடிப்படையே கிடையாது. குஜராத் மாநிலத்தின் ஒட்டு மொத்த மக்கட் தொகையில் கிறித்தவர்களின் எண்ணிக்கை 0.5 சதவீதத்துக்கும் குறைவுதான். இந்தியாவின் மொத்த மக்கட் தொகையில் கிறித்தவர்களின் எண்ணிக்கை கிட்டதட்ட 3 சதவீதம்தான். கிறித்தவர்களான பிரிட்டிஷாரின் ஆட்சியில் சாதிக்க முடியாததை, கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் காங்கிரசு, பா.ஜ.க. ஆட்சியிலா சாதித்துவிட முடியும்?

1931-ஆம் ஆண்டில் காலனி இந்தியாவில் கிறித்தவர்களின் எண்ணிக்கை 62,96,768. இந்த எண்ணிக்கையை அடைய கிறித்தவப் பிரச்சாரகர்கள் 800 ஆண்டு காலம் சமயப் பிரச்சாரம் செய்ய வேண்டி இருந்ததாக அம்பேத்கர் குறிப்பிடுகிறார். இந்து மதவெறியர்கள் கூறுவதைப் போல, கிறித்தவர்கள் இந்து சமூகத்திற்கு அபாயமாக மாற வேண்டுமென்றால், இன்னும் எத்தனை நூறாண்டு காலம் வேலை செய்ய வேண்டும் என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் அந்நிய நாடுகளிடமிருந்து நிதி உதவி பெறுவதாக இந்து மதவெறியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இக்குற்றச்சாட்டு உண்மையானதுதான். கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் ஏகாதிபத்தியங்களிடம் நிதி உதவி பெற்று, இந்திய மக்கள் மத்தியில் 'சேவை' செய்வதற்கு பின்னே மக்கள் விரோத அரசியல் குறிக்கோள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இக்குற்றச்சாட்டை வைப்பதற்கு இந்து மதவெறியர்களுக்கு அருகதை கிடையாது. விசுவ இந்து பரிசத் தனது கஜானாவை நிரப்பிக் கொள்ள அமெரிக்காவில்தான் உண்டியல் குலுக்கியது.

கிறித்தவ தன்னார்வக் குழுக்கள் ஏகாதிபத்தியங்களிடம் நிதி உதவி பெறுகின்றன என்பதற்காக, இந்தியாவில் வாழும் கிறித்தவர்கள் அனைவரையும் தேச விரோதிகள் எனக் குற்றஞ் சாட்டிவிட முடியுமா? நாட்டை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து வரும் இந்து மதவெறியர்கள், தங்களின் தேச விரோத நடவடிக்கைகளை மறைப்பதற்கு கிறித்தவர்கள், முசுலீம்கள் அபாண்டமாக பழி போடுகிறார்கள் என்பதே உண்மை!

★☆★

**கா**ங்கிரசின் தலைவரான கிறித்தவ மதத்தைச் சேர்ந்த சோனியாவிற்குத் தலைவலி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, இந்து மதவெறி அமைப்புகள் கிறித்தவர்கள் மீது தாக்குதல் நடத்துவதாக பல் வேறு முதலாளித்துவ பத்திரிகைகள் எழுதுகின்றன. இந்த வாதம் முழு உண்மையென்றால், காங்கிரசின் தலைமை மாறிவிட்டால், இந்து மதவெறியர்கள் கிறித்தவர்கள் மீது நடத்தி வரும் தாக்குதலை நிறுத்தி விடுவார்களா? இந்த வாதம், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் இந்து மதவெறி அரசியலைக் குறைத்து மதிப்பிடுவதாகும். முசுலீம்கள், கிறித்தவர்கள் போன்ற மதச் சிறுபான்மையினர் மீது வெறுப்பையும், ஆத்திரத்தையும், தாக்குதலையும் தூண்டிவிடும் இந்து மதவெறியும், பார்ப்பன தேசியமும் தான் அவர்களது ஒரே அரசியல் வழி. இந்து மதவெறியர்களின் சித்தாந்த குருவான கோல்வால்கர், ''முசுலீம்கள், கிறித்தவர்கள், கம்யூனிஸ்டுகள் - இவர்கள்தான் இந்து சமூகத்தின் எதிரிகள்'' என்று கூறியிருப்பதை அடித்தளமாகக் கொண்டுதான் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் அரசியல் நடத்தி வருகிறது.

கடந்த டிசம்பர் மாத இறுதியில், ஜெய்ப்பூரில் விசுவ இந்து பரிசத் நடத்திய கூட்டத்தில், கிறித்தவ, முசுலீம் மதத்துக்கு மாறிய இந்துக்களை, மீண்டும் இந்துவாக மதமாற்றம் செய்யும் இயக்கத்தை நடத்தத் தீர்மானித்துள்ளது. மதக் கலவரத்தைத் தூண்டிவிடும் சூழலுள்ள 200 மாவட்டங்களைச் சேர்ந்த 50,000 கிராமங்களில் இந்த ''சுத்தி'' இயக்கத்தை நடத்தவுள்ளனர்; கிறித்தவர்கள் நிறைந்து வாழும் வட கிழக்கு மாநிலங்களிலும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலும் கூடுதல் கவனம் கொடுக்க வி.இ.ப. முடிவு செய்துள்ளது. இந்த இயக்கத்திற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதோடு, இயக்கத்தை ஒருங்கிணைத்து நடத்துவதற்காக அமைப்பிலும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இந்த அடிப்படையில்தான், சென்ற ஆண்டில் குஜராத், பீகார், கர்நாடகா, மேற்கு வங்கம் மாநிலங்களில் கிறித்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைப் பார்க்க முடியும்.

காங்கிரசு, தி.மு.க., த.மா.கா., இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட பா.ஜ.க. எதிர்ப்பு ஓட்டுக் கட்சிகள், பா.ஜ.க.வை ஆட்சியதிகாரத்தில் இருந்து இறக்கிவிடுவதன் மூலம் அதனின் தாக்குதல்களை முறியடித்து விடலாம் என மக்களை நம்பச் சொல்கின்றன. இக்கட்சிகளின் நாற்காலி அரசியல், உண்மையை மூடி மறைப்பதாகும். இரத யாத்திரைகளின் பொழுதும், முசுலீம் எதிர்ப்பு பம்பாய்க் கலவரத்தின் பொழுதும் ஆயிரக் கணக்கான முசுலீம்களை இந்து மதவெறியர்கள் கொன்றொழித்த பொழுது, பா.ஜ.க.விடம் அதிகாரம் இருந்ததா என்ன? ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல், தமது இந்து மதவெறி பாசிச திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அரசு இயந்திரத்தைவிட, சித்தாந்த ரீதியாக அமைப்பாக்கப்பட்டுள்ள தனது வானரப் பட்டாளங்களைதான் பிரதானமாக நம்பியுள்ளது.

மேலும், பா.ஜ.க.வை எதிர்க்கும் ஓட்டுக் கட்சிகள் அதிகாரத்தில் இருக்கும் பொழுது கூட, இந்து மதவெறியர்களை முழுமையாக ஒடுக்குவதற்கு முன் வருவதில்லை. இந்து மதவெறியர்கள் பாபர் மசூதியைத் தகர்த்த பொழுது, மைய ஆட்சியில் இருந்த காங்கிரசு, கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கைதானே பார்த்தது! இவர்கள், பா.ஜ.க.வின் தாக்குதலில் இருந்து கிறித்தவர்களைக் காப்பாற்றி விடுவார்கள் என நம்புவது, தெரிந்தே பாழுங் கிணற்றில் விழுவது போலாகாதா? இந்த மிதவாத இந்துத்துவாக் கட்சியான காங்கிரசு, பா.ஜ.க.விற்கு மாற்று அல்ல.

எனவே, உழைக்கும் மக்கள் காங்கிரசோடு, சிறுபான்மை மதவெறி அமைப்புகளையும், ஏகாதிபத்தியங்களிடம் நிதி உதவி பெறும் கிறித்தவத் தன்னார்வக் குழுக்களையும் புறக்கணிப்பதும், பா.ஜ.க.விற்கு மாற்றாக காங்கிரசைத் தூக்கி வரும் போலி கம்யூனிஸ்டுகளின் சமரசத்திற்கு எதிராக விழிப்புடன் இருப்பதும் அவசியமானது; மதச் சார்பற்ற புரட்சிகர - ஜனநாயக அமைப்புகளில் இணைந்து, இந்து மதவெறியர்களை எதிர்த்து, நேருக்கு நேராக தெருக்களில் மோத வேண்டும். இந்து மதவெறி பாசிஸ்டுகளை, சித்தாந்த ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் முழுமையாக முறியடிப்பதற்கு இது ஒன்றுதான் மாற்று வழி!

• செல்வம்



கிறித்தவர்களுக்கு ஆறுதல் கூற அதிரடிப் பயணம் மேற்கொண்ட சோனியா : ஓட்டுபொறுக்கும் உத்தி.

அட்டைப்பட விளக்கம்

குஜராத் - டாங்ஸ் மாவட்டத்தில், இந்து மதவெறியர்களால் சிதைக்கப்பட்ட ஒரு தேவாலயம்.


படிப்பகம்

www.padippakam.com

### ஈராக் மீதான தாக்குதல்:

# ஒடுக்கப்படும் நாடுகளுக்கு அமெரிக்காவின் மிரட்டல்

ஈராக்கை தாக்க வேண்டும் என்பதற்காகவே, ஆயுதச் சோதனை நாடகமாடிய ஐ.நா. சிறப்புக் குழுவின் மோசடிகளை சென்ற இதழில் பார்த்தோம். இந்நிலையில் குழுவின் தலைவர் பட்லர் அமெரிக்க, ஆங்கில அரசு நிர்வாகத்தினருடன் கலந்து பேசியும், தன் குழு உறுப்பினர்களுடன் கலந்து பேசாமலும், ஈராக்கின் ஒத்துழைப்பை பற்றிய அறிக்கையைத் தயாரித்தார். அதற்காகக் காத்திருந்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள், ஈராக்கின் வரைபடத்தை விரித்து இரசாயன - உயிரியியல் ஆயுதக் கிடங்குகளின் இடங்கள் குறித்து பத்திரிகைளுக்கு வகுப்பு எடுத்தனர். 8 ஆண்டுகள் சோதனை செய்த ஐ.நா. சிறப்புக் குழுவே இப்படி ஒரு இடத்தை இதுவரை சுட்டவில்லை. அப்படி ஒரு இடமிருந்து அதை மறைப்பதற்கு பட்லர் ஒன்றும் ஈராக் ஆதரவாளர் இல்லை. அவரின் நோக்கமே ஈராக்கை ஆக்ரமிப்பு செய்வதற்கான 'நியாயத்தை' கண்டறிந்து சங்கு ஊதுவதுதான். எனவே அமெரிக்கா அறிவித்த ஈராக்கின் உயிரியல் ஆயுதக் கிடங்குகள் மற்றுமொரு மோசடியே.

இந்நிகழ்ச்சிப் போக்கில் வளைகுடாவில் இருக்கும் தரைப்படைகளுடன் கூடுதல் துருப்புக்களையும், ஆயுதங்களையும் அமெரிக்கா குவித்தது. அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை செயலர் வில்லியம் கோகன், மேற்கு ஆசியா - ஐரோப்பாவிற்கு போர் ஆதரவு கேட்டு சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார். கிளிண்டன், டோனிபிளேயரின் அரசு நிர்வாகத்தினர், 'ஈராக்கிற்கு பாடம் புகட்டாமல் வளைகுடாவிலிருந்து திரும்ப மாட்டோம்' என கூறி வந்தனர். அமெரிக்கப் பத்திரிகைகளும், சி.என்.என். போன்ற தொலைக்காட்சிகளும், பல்வேறு நிபுணர்கள் - பேராசிரியர்களைக் கொண்டு பல கோணங்களில் விவாதித்து, போர்தான் ஒரே வழி என்பதை அறிவித்தன.

இப்படி போருக்கான தயாரிப்புகள், சடங்குகள் முடிந்த உடன், 16.12.98 புதன் கிழமையன்று, ஐ.நா. சிறப்புக் குழுவின் தலைவர் பட்லர், 'சோதனையிட மறுக்கும் ஈராக்கை எதிர்த்து, பாக்தாத்தை விட்டு வெளியேறுகிறோம்' என அறிக்கை விட்டார். உடனே ஐ.நா. சபை பாதுகாப்புக் கவுன்சில் இவ்வறிக்கையை விவாதிக்க எடுத்துக் கொண்டது. விவாதம் நடக்கும் போதே அமெரிக்க - இங்கிலாந்து ஏவுகணைகளும், விமானங்களும் ஈராக்கை தாக்கப் புறப்பட்டுவிட்டன. இதை எதிர்த்த ரசிய, சீன பிரதிநிதிகள், பட்லரின் அறிக்கை ஒருதலைப்பட்சமானது, அவரை நீக்க வேண்டும் எனக் கோரினர். அமெரிக்க - ஐரோப்பிய - ஜப்பானிடம் பொருளாதாரத்தில் சரணடைந்த அந்நாடுகள் அதற்கு மேல் எதுவும் சாதிக்க முடியவில்லை. ஐ.நா. செயலர் கோபி அன்னான் 'என் வாழ்க்கையில் இது ஒரு சோக நாள்' என்று நீலிக் கண்ணீர் வடித்தார். மாறாக தாக்குதல் நடத்தும் அமெரிக்கா - இங்கிலாந்தை கண்டித்து ஒரு வார்த்தையைக் கூட உதிர்க்கவில்லை. ஐ.நா. சபை வாஷிங்டனின் பஜனை மடமாகிவிட்டதை இவை உறுதிப்படுத்துகின்றன.

நான்கு நாட்கள் தாக்குதலில் 91 போரை விட அதிக அளவு குண்டுகள் போடப்பட்டன. நூற்றுக் கணக்கான ஈராக் துருப்புக்களும், மக்களும் கொல்லப்பட்டனர்; காயம் அடைந்தனர். மக்கள் குடியிருப்புகள், இராணுவ அரசியல் தலைமையகங்கள், தொழில் நிறுவனங்கள், துறைமுகம், தொலைத் தொடர்பு நிலையங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன.

குண்டு வீசும் காட்சிகளையும், அமெரிக்கர்களின் சாகசத்தையும் சி.என்.என். மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்கள் மூலம் அமெரிக்கர்கள் நேரடியாக கண்டு களித்தனர். அவை கிறிஸ்துமஸுக்கு முந்தைய வாண வேடிக்கை போல இருந்திருக்கலாம். போர் பற்றிய மக்களின் கருத்தை தொகுத்தளித்த சி.என்.என். காட்சிகளில் சிகாகோ ஓட்டல் ஒன்றில் வறுத்த கோழியைக் கடித்தவாறே, கிளிண்டனுக்கு ஜே போட்டு சதாமைக் கொல்ல வேண்டும் என்று அமெரிக்கர்கள் சிலர் முழங்கினர். 91 போரை விட காட்சிகளின் துல்லியத்தை உயர் நுட்ப தொழில் நுட்பம் மூலம் சாத்தியமாக்கிய செய்தி நிறுவனங்கள் 4 நாள் தாக்குதலை வைத்து பல கோடி டாலர் பணத்தை விளம்பரத்தால் ஈட்டின.


ஈராக்கின் குழந்தைகள் கொல்லப்படுவதையும், மக்கள் முடமாக்கப்படுவதையும் ரசித்துக் கொண்டு அமெரிக்காவுக்கு ஜே போடும் அமெரிக்கர்களின் சமூக உணர்வு நமக்கு அருவருப்பை ஏற்படுத்துகிறது.

இருப்பினும் முழு சமூகத்தையும் மேற்கண்டவாறு நாம் எண்ணிவிட முடியாது. 'ஈராக்கை வாழ விடு', 'என் னெய்க்காக ரத்தம் கேட்காதே' என்ற முழக்கங்களுடன் சில அமெரிக்கர்கள் சில நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வழக்கம் போல இவையும் செய்தி நிறுவனங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டன. மேலும் இவை மனித நேய ஆர்ப்பாட்டங்கள்தான். அரசியல் ஆக்கிரமிப்பை கண்டித்து நடத்தப்பட்டவை அல்ல.

ஈராக் ஆக்ரமிப்பை எதிர்த்து ஐரோப்பிய, வளைகுடா, ஆசிய நாடுகளின் மக்களும், பல கட்சிகளும் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் உலக செய்தி நிறுவனங்களால், குறிப்பாக அமெரிக்க நிறுவனங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டன. ஆனால் மண்டை பிளக்கும் உச்சி வெய்யிலில் கஷ்டப்படும் அமெரிக்க வீரர்களின் தியாகத்தையும், 'அமைதி விரோதி' சதாம் உசைனைப் பற்றியும், அவரை வீழ்த்த வேண்டும் என பேசி வந்த கிளிண்டன், டோனி பிளேயர் உரைகளும் திரும்ப திரும்ப பிரச்சாரம் செய்யப்பட்டன.

அவர்களது சட்டப்படியே தவறு என்றாலும், அமெரிக்க, இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர், சதாமைக் கொல்ல வேண்டும் என வெளிப்படையாக சபைகளில் முழங்குகின்றனர். சதாமை மட்டும் அழிப்பதற்கான ஒரு 'கமாண்டோ நடவடிக்கையும்' பெண்டகனால் முதலில் பரிசீலிக்கப்பட்டது. ஹாலி

அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலால் சிதைந்துபோன சூடானிலுள்ள அல்-ஷிஃபா மருந்துத் தொழிற்சாலை.





படிப்பகம்

www.padippakam.com

வுட் படங்களைப் போலன்றி, நிஜத்தில் இந்நடவடிக்கை காரணமாக பல அமெரிக்க வீரர்கள் இறப்பார்கள் என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இருப்பினும் ஈராக் எதிர் கட்சியினர், அதிருப்தி பிரிவினர், இராணுவ அதிகாரிகள் ஆகியோரிடம், சி.ஐ.ஏ. மூலமாக அல்லாமல், வெளிப்படையாகவே அமெரிக்க அரசு தொடர்பு கொண்டு சதாமை வீழ்த்த திட்டம் போடுகிறது. அதற்காக அமெரிக்க பிரதிநிதி சபை 100 கோடி மில்லியன் டாலரை ஒதுக்கி 'ஈராக் விடுதலை' தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. சதாமை எதிர்த்து கருத்துப் பிரச்சாரம் செய்ய ஒரு வானொலி நிலையமும் தொடங்கப்பட்டது. கிளிண்டனும், பிளேயரும் சதாமை வீழ்த்தாமல் தீர்வில்லை என்றும், அப்போதுதான் ஈராக் மக்கள் அமைதியாக வாழ முடியும் என்கின்றனர். வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், சதாமை நீங்கள் வீழ்த்தவில்லை என்றால், உங்களையும் கொல்வோம், தொடர்ந்து குண்டு வீசுவோம் என ஈராக் மக்களை மிரட்டி வருகின்றனர்.

முன்பெல்லாம் ஆட்சிக் கவிழ்ப்புக்களையும், சதி வேலைகளையும் திரைமறைவில் நடத்திய அமெரிக்கா தற்போது வெளிப்படையாக செய்கிறது என்பதைத் தவிர இதில் ஆச்சரியம் ஏதுமில்லை. நாடுகளின் இறையாண்மையை அங்கீகரித்து அவற்றில் தலையிடாமை என்பதெல்லாம் ஒரு கேலிக் கூத்துதான் என்பதை அமெரிக்கர்கள் மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றனர்.

கேட்டால் சதாம் ஒரு பயங்கரவாதி, உலக அமைதிக்கு விரோதி என்பதால் எதிர்க்கின்றோம், மற்றபடி இறையாண்மையை மதிக்கிறோம் என பணிவாக பதிலளிப்பார்கள். ஆனால், பயங்கரவாதி, அமைதி விரோதி, ஜனநாயக மறுப்பாளர் போன்ற வார்த்தைகளின் பொருள் அமெரிக்க அகராதியில் மட்டும் அடிக்கடி மாறுபடும். அல்லது அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்ப்பவர்களுக்கோ, அவர்ளுக்காக பயன் படாமல் போவபவர்களுக்கோ இந்தப் பட்டங்கள் சூட்டப்படும். 98-ஆம் ஆண்டில் இரு ஆப்ரிக்க நாடுகளின் அமெரிக்க தூதரங்களில் குண்டு வெடித்ததை ஒட்டி சூடானிலும், ஆப்கானிலும் அமெரிக்க விமானங்கள் குணடு போட்டன. உலகெங்கும் அமெரிக்கர்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை ஆப்கனில் வாழும் அரபுக் கோடீஸ்வரரான பின்லேடன்தான் ஏவி விடுகிறார் என குண்டு போட்ட அமெரிக்கா நியாயம் பேசியது. ஆனால் 80-களில் ஆப்கானிஸ்தானத்தை ஆக்ரமித்த சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட இதே பின்லேடனுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்ததோடு, தேச பக்த விடுதலைப் போராளி என பட்டமும் சூட்டியது. இருப்பினும் இசுலாமியப் பழமைவாதியான பின்லேடன், அப்போதே இரு பால் மாணவர்கள் படிக்கும் பள்ளிகளின் ஆசிரியர்களை இசுலாத்தின் பெயரால் கொன்று வந்தார். அப்பேற்பட்ட 'விடுதலைப் போராளி'யைத்தான் இன்றைக்கு பயங்கரவாதி என்கிறார்கள்.



சூடான் - ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலைக் கண்டித்து நியூயார்க் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

1989-இல் பனாமா அதிபர் நொரேகா போதைப் பொருள் வியாபாரம் செய்கிறார் என்றும், பனாமாவிற்கு ஜனநாயகத்தை அளிக்கிறோம் எனவும் அங்கு அமெரிக்கா நுழைந்தது. 100 மக்களைக் கொன்று அதிபர் நொரேகா அமெரிக்கா கொண்டு வரப்பட்டு சிறையிலடைக்கப் பட்டார். இதே நொரேகா அமெரிக்காவின் அடியாளான கோன்டுரஸ் போன்ற நாட்டு அரசுகளோடு சேர்ந்து போதைப் பொருள் கடத்திய போது கண்ணை மூடிய அமெரிக்கா, தனது நட்பு நாடுகளோடு நொரேகா முரண்பட்ட போது மட்டுமே பயங்கரவாத பட்டத்தை சூட்டி அவரை கைது செய்தது. இன்றைக்கு இங்கிலாந்து நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் சிலியின் முன்னாள் அதிபர் பினோசெட், பல ஆயிரம் மக்களை குறிப்பாக கம்யூனிஸ்டுகளை கொன்ற ஒரு பயங்கரவாதி. இவருக்கு இறுதி வரை உதவி செய்த அமெரிக்கா இன்றும் அவரை மீட்க முயன்று வருகிறது.

ஜெயா சசி கும்பலைப் போல பிலிப்பைன்சை மொட்டையடித்த மார்கோசும் ஒரு அமெரிக்க பிணாமிதான். இந்த சர்வாதிகாரியை அந்நாட்டு மக்கள் தூக்கி எறிந்ததும், அவருக்கு அடைக்கலம் கொடுத்து அணைத்துக் கொண்டது அமெரிக்கா. இன்று ஆப்கானில் ஆட்டம் போடும் தாலிபான் பயங்கரவாதிகளை ஆட்சியில் அமர்த்தியதும் இவர்கள்தான். ஆக, இந்நூற்றாண்டின் சர்வாதிகாரிகள், பயங்கரவாதிகளில் பெரும்பான்மையினர் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டவர்கள்தான். பிணம் தின்னும் இந்தக் கழுகுகள்தான் ரத்தம் ஒழுகும் அதே வாயோடு மனித உரிமை, உலக அமைதி பற்றியும் பேசுகிறது. அமெரிக்காவின் பல அத்துமீறல்கள், மோசடிகள் நிரூபிக்கப்பட்டாலும், இன்று வரை அவற்றுக்கு எந்த விளக்கத்தையும் அவர்கள் அளிக்கவில்லை. யாரும் வற்புறுத்தவும் முடியாது.

தங்களுக்கெதிரான இசுலாமிய பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்ற பெயரில், கடந்த அக்டோபர் மாதம் சூடானில் அல் ஷீபா என்ற மருந்துக் கம்பெனியை அமெரிக்கா தாக்கி அழித்தது. சூடான் மக்களுக்கு மருந்து அளிப்பதில் பாதிக்கும் மேல் பங்கு வகிக்கும் அந்நிறுவனம் ஒரு மருந்துக் கம்பெனிதான் என்பது உலகத்தால், ஐரோப்பிய பத்திரிக்கைகள் உள்ளிட்டு, நிரூபிக்கப்பட்டுவிட்டது. இல்லை அது பயங்கரவாதிகளின் ரகசிய முகாம்தான், என சாதிக்கும் அமெரிக்காவையே ஒரு உண்மை அறியும் குழுவை அனுப்பி ஆராயுமாறு, சூடானின் வெளியுறவுத் துறை அமைச்சர் இஸ்மாயில் சவால் விடுகிறார். ஐ.நா. சபையிடமும், உலக நாடுகளிடமும் நியாயம் கேட்கும் சூடானுக்கு கிடைக்கும் பதில் மௌனம்தான். இன்று வரை அமெரிக்காவும், அதன் பத்திரிகைளும் சூடான் விவகாரம் பற்றி வாய் திறக்காமல் இருக்கின்றன.

அடுத்து ஈராக் வைத்திருக்கும் இரசாயன - உயிரியல் ஆட்கொல்லி ஆயுதங்கள்தான் வளைகுடா அமைதிக்கும், உலக மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது எனக் கூறும் மற்றொரு அமெரிக்கப் புளுகைப் பார்ப்போம். ஈராக்கில் மட்டுமல்ல, ஈரான், துருக்கி, சிரியா, எகிப்து போன்ற நாடுகளிலும் மேற்கண்ட ஆயுதங்கள் இருக்கின்றன. வளைகுடாவில் ஆயுதப் போட்டியைத் துவக்கி வைத்து, எல்லோரையும் நாசகார ஆயுத பாணி

**ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையினால், கடந்த ஏழு ஆண்டுகளில் ஐந்து இலட்சம் குழந்தைகள் மாண்டுபோயினர்; மோனிகா விவகாரத்திற்காக அல்ல, இம்மனிதப் படுகொலைக்காகத்தான் கிளிண்டன் தண்டிக்கப் படவேண்டும்.**





படிப்பகம்


www.padippakam.com

யாக்கிய முதல் குற்றவாளி அமெரிக்கா தான். மேலும் இதன் வட்டார ரௌடியான இஸ்ரேல்தான் சகல விதமான கொடூர ஆயுதங்களை குவித்து வைத்திருக்கிறது. அணு ஆயுதத் தடை மற்றும் ஏனைய தடை ஒப்பந்தங்களில் இசுரேல் கையெழுத்திடாமல் இருப்பதற்கே அமெரிக்காதான் காரணம். இசுரேலிடம் மட்டும் 200-க்கும் மேற்பட்ட அணு ஆயதங்கள் உள்ளன.

ஒரு வாதத்திற்காக நாசகார ஆயுதங்கள்தான் உலக அமைதிக்கு எதிரி என்றால் அதை மிகப்பெருமளவு குவித்து வைத்திருக்கும் ஒரே நாடு அமெரிக்காதான். நெல்தா பாலைவனம், மன்ளுல் தீவுகள், மன்ஹாட்டன் திட்டம், ராக்கி மலைத் தொடர் ஆயுதக் கிடங்கு போன்ற இடங்களில் நூற்றுக் கணக்கான அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டு ரசாயன, உயிரியல் ஆட்கொல்லி வாயுக்களும், குண்டுகளும் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் ஒரு சிறு விபத்து நடந்தாலே முழு உலகமும் அழிந்து போகும் அபாயம் உண்டு. அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கான முன்னாள் அமெரிக்க வீரர்கள், கதிர் வீச்சு, மற்றும் புற்றுநோயால் இறந்து போவது சமீபத்தில் அம்பலத்திற்கு வந்தன. மேலும், ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களிலும் நாசகார ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன. ஒரு துளியின் மூலம் நிமிடத்தில் மனிதனைக் கொல்லும் சாரின் எனப்படும் விச வாயுவை அதிக அளவில் உற்பத்தி செய்து பதுக்கி வைத்திருக்கும் நாடு அமெரிக்காதான். தடை செய்யப்பட்ட அமெரிக்க ஆயுதப் பிரதேசங்களில் கதிர் வீச்சு அதிக அளவில் இருப்பதால், இங்கு குழந்தை இறப்பும், ஏனைய நோய்களும் பல மடங்கு அதிகமாய் உள்ளன. தனி நபர்கள், சில பத்திரிகையாளர்கள், பகுதி வாழ் மக்களின் போராட்டங்களினால் மட்டுமே இத்தகைய சில செய்திகள் கசியத் தொடங்கியிருக்கின்றன. அமெரிக்க அரசால் மறைக்கப்பட்டிருக்கும் செய்திகள் யாருக்கும் தெரியாது. எனவே ஈராக் அல்ல, தனது நாட்டில் தான் உலகையே அழிக்கும் கொடிய ஆயுதங்கள் உள்ளன என்பது அமெரிக்க மக்களுக்கே தெரியாது.

தனது மோலதிக்கத்தை விரிவு படுத்தும் அமெரிக்காதான், இதுவரை உலகம் கண்டிராத கொடிய ஆயுதங்களை ஏழை நாட்டு மக்கள் மீது பயன்படுத்தி பரிசோத்தி ருக்கிறது. நாகசாகி - ஹிரோஷிமா அணு குண்டு வீச்சு, வியட்நாமில் ஏஜெண்ட் ஆரஞ்சு, சாரின் விசவாயு, ஈராகில் முன்னேறிய தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட தாம்கவாக் ஏவுகணைகள், நிலவறைகளையும் தகர்க்கும் ஆழ் குழி வெடி குண்டுகள், நவீன தகவல் தொடர்பு முறையில் பல்வேறு படையணிகளை ஒன்றிணைத்து தாக்கும் நவீன போர் முறை - இவையெல்லாம் அமெரிக்கா பரிசோதித்துப் பார்த்தவைகள்தான். இந்தப் பயங்கரவாதத்தின் விளைவுகளை ஜப்பானிலும், வியட்நாமிலும், ஈராக்கிலும் இன்றைக்கும் பார்க்க முடியும். எனவே நாசகார ஆயுதங்களை குவித்திருப்பது மட்டுமல்ல, அதை பயன்படுத்தியும் வருகின்ற அமெரிக்காதான் உலக அமைதிக்கும் - மக்களுக்கும் மிகப் பெரும் எதிரியாகும்.

அமெரிக்கா குண்டு வீசும் நேரங்களில் கூட அஞ்சாமல் திருமணங்கள் நடத்தியும், மசூதிக்கு தொழச் சென்றும் இயல்பு வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகிறார்கள் ஈராக் மக்கள். ஆனால் அதற்கு அவர்கள் கொடுத்த விலையோ அதிகம். சதாம் உசேன் பதவியேற்றதிலிருந்து இன்றுவரை குடும்பத்தில் ஒருவராவது போரில் உயிரிழந்திருக்கின்றார்கள். 8 ஆண்டு பொருளாதாரத் தடையின் மூலம் மட்டும் 55 இலட்சம் மக்கள், குழந்தைகள் இறந்திருக்கின்றனர். நோயும், பஞ்சமும், வேலையின்மையும் கொண்ட ஈராக்கில் இருந்து உலகமெங்கும் அகதிகளாகச் சென்றவர்கள் எண்ணிக்கை 40 இலட்சம். சர்வாதிகாரி உசேன் ஆட்சியிலும் கூட ஒரு மதச்சார்பற்ற சமூகமாக விளங்கிய ஈராக்கில் பல்வேறு துறைகளில் முன்னேறி வந்த பெண்கள் நிலை இன்று மிகவும் மோசமடைந்துள்ளது. விபச்சாரம் செய்தேனும் உயிர் வாழ வேண்டிய நிலைதான் வறிய பெண்களுக்கான வழியாக உள்ளது. மொத்தத்தில் கிராம, நகரப் பொருளாதாரம் தகர்ந்து ஈராக் சிதைந்து வருகிறது. சதாமின் அதிகார வர்க்கமும், வசதி படைத்தோரும் தவிர ஏனையாரின் நிலைமை இதுதான்.



ஈராக் மீதான தாக்குதலைக் கண்டித்து, பாலஸ்தீன மக்கள் அமெரிக்க-இங்கிலாந்துக் கொடிகளை எரித்து நடத்தும் ஆர்ப்பாட்டம்: அரபு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வின் அடையாளம்.

இதில் சதாம் உசைனின் பங்கை மதிப்பிடவில்லை என்றால், ஏகாதிபத்திய எதிர்ப்பில் நாம் தவறிழைக்க நேரிடும். ஈராக் தொலைக்காட்சியில், அல்லாவின் பெயரால் சாத்தான் அமெரிக்காவை வீழ்த்துமாறு அரபு மொழியின் இலக்கண நடையில் உரையாற்றும் சதாம் உசேன் உண்மையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளியல்ல. ஈரான் மீது ஆக்ரமிப்புப் போர் நடத்தியும் வட ஈராக்கில் சுய நிர்ணய உரிமை கேட்டு போராடும் குர்திஷ் இன மக்களை கொன்றொழித்தும் குவைத்தை ஆக்கிரமிப்பு செய்தும் வந்த அவர் ஒரு பிராந்திய மேலாதிக்கவாதி. அமெரிக்காவால் வளர்க்கப்பட்ட சதாம், கிடைத்த பங்கை விட அதிகம் கோரியதுதான் அதனுடன் முரண்படக் காரணம். இதைத் தொடர்ந்தே இன்று அமெரிக்காவை எதிர்க்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார். குடும்பத்தினர், உறவினர்களைக் கொண்டு பாத் கட்சி, இராணுவ - நிர்வாகத் தலைமைகளை நிரப்பியுள்ளார். ஒரு கட்சி இராணுவ பாசிச சர்வாதிகாரத்தை நடத்தி வருகிறார்.

★☆★

இன்றைக்கும் ஈராக் மீதான தாக்குதல் முற்றுப் பெறவில்லை. வாரத்திற்கு ஒரு முறையாவது அமெரிக்க விமானங்கள் குண்டு போடுகின்றன. இன்னும் 50 ஆண்டுகளுக்கு வளைகுடாவில் இருந்து வேலை செய்யும் வண்ணம் பென்டகன் தனது இராணுவத் திட்டத்தை தயாரித்து அமுல்படுத்தி வருகிறது. ஈராக் என்ற துருப்புச் சீட்டை வைத்து மத்திய கிழக்கு ஆசியாவில் தமது ஆதிக்கத்தை தொடர்ந்து தக்க வைக்கும் அமெரிக்கா லேசில் அங்கிருந்து கிளம்பப் போவதில்லை. இது ஈராக்கிற்கு மட்டுமல்ல, அரபு நாடுகளுக்கு மட்டுமல்ல; ஒடுக்கப்படும் நாடுகள் அனைத்திற்கும் அமெரிக்கா விடுக்கும் ஒரு எச்சரிக்கை.

அதே நேரம், அமெரிக்கா தலைமையிலான மேல்நிலை வல்லரசுகள் தமது மேலாதிக்கத்தை கொண்டு வருவதற்கு இராணுவ ரீதியில் மட்டுமல்ல, பண்பாடு பொருளாதார அரசியல் ரீதியிலான கருவிகளையும் வைத்திருக்கின்றனர். உலக வர்த்தக நிறுவனம் - காட் ஒப்பந்தம், ஐ.எம்.எப்., உலக வங்கி என்ற நிறுவனங்கள் ஏற்கனவே அத்தகைய மேலாதிக்கத்தை அமெரிக்க உதவியுடன் செயல்படுத்த ஆரம்பித்துவிட்டன. இன்றைக்கு ஆயுதச் சோதனை பெயரில் ஈராக்கின் மீது தொடுக்கப்படும் தாக்குதல், நாளையே ஐ.எம்.எப்., உலக வங்கியை எதிர்த்து போராடும் தென்கொரிய தொழிலாளர்கள் மீதோ, மான்சாண்டோ என்ற பன்னாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கும், டெர்மினேட்டர் விதை திட்டத்தை எதிர்த்துப் போராடும் இந்திய விவசாயிகள் மீதோ தொடுக்கப்படும். ஆகையினால் அமெரிக்கா தலைமையிலான மேல்நிலை வல்லரசுகளை எதிர்த்து ஒடுக்கப்படும் நாடுகளும் மக்களும் பல்வேறு அரசியல் போராட்டங்களை எடுக்க வேண்டும். உலக பாட்டாளி வர்க்கம் தலைமையேற்று அதை சாதித்து அமெரிக்காவை வீழ்த்தும் வரை உலகிற்கு அமைதியில்லை; ஒடுக்கப்படும் நாட்டு மக்களுக்கு விடுதலையுமில்லை.

முற்றும் ● நாதன்



படிப்பகம்

www.padippakam.com

இலவச வேட்டி -சேலை

# மக்களின் அவலமும் அதிகார முறைகேடுகளும்

இலவச வேட்டி, சேலை என்று மக்களை நிரந்தர பிச்சைக்காரர்களாக கையேந்த வைக்கும் அரசின் மோசடித் திட்டம் இவ்வாண்டு அவர்களின் உயிரைப் பறிக்கும் அபாயத்தையும் உருவாக்கியது.

● சென்னை நேரு விளையாட்டரங்கம் எதிரே உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் இலவச வேட்டி, சேலை வழங்கும் போது நெரிசல் ஏற்பட்டு 40 பேர் மயங்கிச் சரிந்தனர். முதியோர், பெண்கள், குழந்தைகள் என்று நெறிபட்ட மக்களின் அவலத்தை, கோரத்தை என்ன வென்பது? விரைந்து வந்த போலீசு, கூட்டத்தை ஒழுங்குபடுத்தாதிருந்தால் பலரது உயிர் பலியாகியிருக்கும்.

● வட சென்னை, தண்டையார் பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இதே போன்ற நெரிசல் ஏற்பட்டு மூன்று பெண்கள் மயங்கி விழுந்தனர்.

● தென் சென்னைப் பகுதி சைதாப் பேட்டை ஜோன்ஸ் சாலையிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் காலையிலிருந்தே கூட்டம் குவியத் தொடங்கியது. 10 மணிக்கே அலுவலகம்வர வேண்டிய அதிகாரிகள் 11 மணியாகியும் வராததால் ஆத்திரமடைந்த மக்கள் திடீர் சாலை மறியலில் இறங்கினர். அதன் பிறகே பதறியடித்து ஓடோடி வந்த அதிகாரிகளும் போலீசும் மக்களை சமாதானப்படுத்திய பின் சாலை மறியல் கைவிடப்பட்டது.

● இதேபோல் சென்னை விருகம்பாக்கத்திலும் சிறிது நேரம் சாலை மறியல் நடந்துள்ளது.

● அம்பத்தூர் பகுதியிலோ அதிகரித்த மக்கள் கூட்டத்தைக் கண்டு, வினியோகத்தையே நிறுத்திவிட்டு மக்களை விரட்டியடித்தனர். பிறகும் பல நாள் இழுத்தடித்து வீணாக அலைக்கழித்தனர்.

இலவச வேட்டி சேலைக்கு அலையும் கூட்டம் தானே என்று உழைக்கும் மக்களை இழிவாகப் பார்க்கும் அதிகார வர்க்கக் கூட்டத்தின் அலட்சியப் போக்கு தவிர இவற்றுக்கு வேறு காரணம் உண்டா?

இந்த உழைப்பாளி மக்களின் உழைப்பில் உண்டு கொழுத்து, அம்மக்களின் வரிப்பணத்தையே சூறையாடும் இந்த அதிகார வர்க்கக் கும்பலும் ஓட்டுப் பொறுக்கிலும் இப்படிப்பட்ட கவர்ச்சித் திட்டங்களால் மக்களை ஏய்க்க முயல்கின்றனர். மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல், அவர்களின் கவனத்தை திசை திருப்பும் நய வஞ்சகத் திட்டம்தான் இது.

பிச்சை எடுத்தாராம் பெருமாளு அதைப் பிடுங்கித் தின்னாராம் அனுமாரு என்ற கதையாக இந்த இலவச வேட்டி சேலைத் திட்டத்திலும் கொள்ளையடித்த மாபாதகர்கள்தான் ஜெயலலிதாவும் அவரது கொள்ளைக் கூட்ட மந்திரிகளும்.

நாங்கள் இப்படி நடக்க மாட்டோம், ஊழல் செய்தவர்களை தண்டிப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தி.மு.க.வோ, இதில் தாங்கள் அ.தி.மு.க.விற்குச் சற்றும் சளைத்தவர்களல்ல என்று நிருபித்து வருகின்றனர்.

தென் மாவட்டங்கள் முழுவதிலும் வழங்கப்பட்ட வேட்டி - சேலைகளின் அலங்கோலங்கள் பற்றி தினமும் செய்திகள் வந்து குவிந்தன. பல இடங்களில் வேட்டி, சேலைகளின் நீள, அகலங்கள் மிகக் குறைவாக இருந்தன. சரியான அளவிலிருந்த துணிகளில் பல நீரில் போட்டதும் கரைந்து போனது போல சுருங்கி, அளவில் குறைந்தன.

பெண்களின் மானங் காக்க வேண்டிய சேலைகளில் பல, சல்லடைத் துணிகளாக, உடுத்தவே தகுதியற்றவையாக இருக்கின்றன என்று பல பெண்கள் சீறி விழுந்தனர்.

சில இடங்களில் அங்குள்ள மக்கள் தொகையில் பாதிக்கும் குறைவான எண்ணிக்கையில் துணிகள் அனுப்பப்பட்டன. அங்கெல்லாம் அதிகாரிகளே, குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே துணி என்று கூறி, வேட்டியோ அல்லது சேலையோ மட்டும் கொடுத்து சமாளித்துள்ளனர்.

இம்முறை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு மட்டுமே இலவச வேட்டி, சேலை வழங்குவது என அரசு அறிவித்தது. ஆனால் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோர் யார் என்பதை முடிவெடுப்பது தின்று கொழுத்த வருவாயத் துறை அதிகாரிகள் என்கிற போது, அது எப்படி நடக்கும் என்பது வெள்ளிடை மலை. காசு கொடுத்தால் வறுமைக் கோட்டிற்குக் கீழே என்ற கணக்கில் வந்து விடலாம். அதற்கும் வழியற்ற, உண்மையிலேயே வறுமையில் பரிதவிக்கும் மக்களின் பாடோ மேலும் அவலத்தில்.

பல இடங்களில் ஆளும் கட்சிக்காரர்களே வருவாய்த்துறை அதிகாரிகளின் இடைத் தரகர்களாகப் புகுந்து வேண்டியவர்களுக்கும், பணம் கொடுத்தவர்களுக்கும் வேட்டி, சேலைகளை வாரி வழங்கி முறை கேடும் செய்துள்ளனர்.

இத்திட்டத்திற்கான கைத்தறி அமைச்சர் என்.கே.கே. பெரியசாமியோ, துணிகள் வினியோகத்தில் முறைகேடு ஏதும் நடக்கவில்லை என்கிறார். 'தமிழகம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நேர்மையான முறையில், நல்ல, தரமான துணிகள் வாங்கப்பட்டன. நீள, அகல அளவுகள் குறைந்த துணிகளை வாங்காது ஒதுக்கியதால் அவை போதுமானவையாக இல்லை. எனவே கடைசி நேரத்தில் விசைத்தறி துணிகளை வாங்கினோம்' என்று அமைச்சர் கூறுவதிலிருந்தே முறைகேடு நடந்துள்ளது என்பது உறுதிப்படுகிறது.

மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த ஓட்டுப் பொறுக்கி கும்பல் தயாராக இல்லை. இவர்களிடம் அதற்கான திட்டங்களும் இல்லை. மாறாக இந்த அவலத்தை நீடிக்க வைத்து, இலவசத் திட்டங்களுக்கு அலை மோதும் பிச்சைக்காரர்களாக உழைக்கும் மக்களை சீரழித்து வருகின்றனர். இக்கொடுமைகளைச் செய்யும் இக்குற்றவாளிகள், இம்மக்களையே இழிபடுத்துவதற்கும் தயங்குவதில்லை.

இந்த இழிவுகளைத் தாங்கி, அடிமைகளாகவே வாழ்ந்து மடிவதா? அல்லது தமது உழைப்பால் இந்த உலகையே உய்விக்கும் உழைப்பாளிகள் தமது கரங்களில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி இழிவை ஒழிப்பதா? அடிமைகள் என்றென்றும் அடிமைகளாகவே இருந்ததில்லை என்பதே உலக வரலாறு.

சென்னையில் இலவச சேலை வாங்க வந்து கூட்ட நெரிசலில் சிக்கிக் கொண்ட பெண்கள் : அதிகார வர்க்க அலட்சியத்தின் விளைவு.





படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு, மேல்சாதி வெறியர்களின் சொர்க்க பூமியா?

**பார்ப்பன ஜெயா ஆட்சிக்கு இணையாக, 'சமூக நீதிக் காவலர்' கருணாநிதி ஆட்சியிலும் தாழ்த்தப்பட்டோர் மீது மேல்சாதி வெறியர்களும், போலீசும் தொடுத்து வரும் தாக்குதல்களுக்கு தடையும் கிடையாது; நியாயமும் கிடைப்பதில்லை!**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கடந்த அக்டோபரில் கொழுந்து விட்டு எரிந்த சாதி வெறியாட்டங்கள் சற்றே தணிந்துள்ள நிலையில், கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர் மாவட்டங்களில் நடந்துள்ள சாதிவெறித் தாக்குதல்களும் அட்டூழியங்களும் தமிழகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.

மேல் சாதிப் பெண்களைக் காதலித்து மண முடித்த 'குற்றத்திற்காக' புதுக்கோட்டை மாவட்டம், திருநல்லூர் கிராமத்தில் மூன்று தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சாதி வெறியர்களால் மிருகத்தனமாக வதைக்கப்பட்டு, மொட்டையடித்து இழிவுபடுத்தப்பட்டு, ஊரே விட்டே விரட்டப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட இளைஞரான பால்ராஜ் மேல் சாதியைச் சேர்ந்த செல்வி என்ற பெண்ணைக் காதலித்து, சாதி வெறியர்களுக்கு அஞ்சி, திருமணம் செய்து கொள்ள இருவரும் மணப்பாறைக்குத் தப்பிச் சென்றனர். இச்செய்தியறிந்த சாதி வெறிக் கும்பல் அவர்களைப் பிடித்து நைச்சியமாகப் பேசி ஊருக்கு அழைத்து வந்தது. ஊருக்குள் நுழைந்ததுமே செல்வியை மிரட்டி அவரது குடும்பத்தாருடன் அனுப்பி வைத்த அக்கும்பல், செருப்பாலும் தடிகளாலும் பால்ராஜை மிருகத்தனமாகத் தாக்கியது. "கீழ்ச்சாதி நாய்க்கு எங்க பொண்ணுதான் கேட்குதா?" என்று வேப்ப மரத்தில் கட்டி வைத்து ஆடைகளைக் கிழித்து அடித்து நொறுக்கியது. பின்னர், "இவனை மட்டுமில்ல... இவனுக்கு முன்னால இந்த ஊரில கலப்புத் திருமணம் செய்த எல்லாப் பயலுகளையும் கட்டி வச்சு தோலை உரிக்கணும்" என்று கூறிக் கொண்டே சாதி வெறிக் கும்பல் கிளம்பியது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு கலப்புத் திருமணம் செய்த ஆறுமுகமும், மூன்றாண்டுகளுக்கு முன்பு அவ்வாறு திருமணம் செய்த சுப்பிரமணியும் இழுத்து வரப்பட்டனர். ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள மாரியம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள மரத்தில் இம்மூன்று தாழ்த்தப்பட்ட இளைஞர்களையும் கட்டி வைத்து சாதி வெறிக் கும்பல் காட்டு மிராண்டித் தனமாகத் தாக்கியது. "உங்களை உதைச்சா தாண்டா அது உங்க சாதிப் பசங்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்" என்று கூறிக் கொண்டே தாக்கிய அக்கும்பல், ஊர்ப் பஞ்சாயத்து தீர்ப்பு என்ற பெயரில் அவ்விளைஞர்களுக்கு மொட்டையடித்து, கரும்புள்ளி - செம்புள்ளி குத்தி, ஆடைகளை உருவி நிர்வாணமாக்கி, "ஊர்கோயிலை உருண்டு கிட்டே சுத்தி வாங்கடா" என்று அடித்து உருள வைத்தது. கடந்த நவம்பர் 19-ஆம் நாளன்று நடந்த இக்கொடுஞ்செயலைத் தொடர்ந்து அவர்களது வீடுகளிலிருந்த அற்ப உடமைகளும் அடித்து நொறுக்கப்பட்டு, அவர்கள் ஊரை விட்டே துரத்தப்பட்டனர்.

உதிரத்தை உறையச் செய்யும் இக் கொடுஞ்செயலைப் பற்றி மெதுவாக செய்திகள் கசிந்த பிறகும் போலீசும் ஆட்சியாளர்களும் சாதிவெறியர்களைக் கைது செய்யாத நிலையில், டிசம்பர் 9-ஆம் நாளன்று 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் புதுக்கோட்டையில் தொடர் முழுக்க ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் பின்னரே மேல் சாதிவெறியர்கள் 10 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதே சமயம் பால்ராஜ் இளம் பெண்ணைக் கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, மேல் சாதியினரைத் திருப்திபடுத்தும் வகையில், அவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

"கலப்புத் திருமணம் செய்தால் உதவித் தொகையும் சலுகைகளும் கிடைக்கும் என்பதால், இப்படி இரண்டாம் முறையாக கலப்புத் திருமணம் செய்ததாலேயே, ஊர்ப் பஞ்சாயத்து அவர்களைத் தண்டித்தது. இதை சாதியத் தாக்குதலாகச் சித்தரித்து எமது சமூகத்தினர் மீது வீண் பழி சுமத்தி பொய் வழக்குப் போட்டுள்ளார்கள்" என்று கூசாமல் புளுகும் தேவர் சாதிக் கூட்டமைப்பின் (மூவேந்தர் முன்னேற்றக் கழகம்) தலைவர் சேதுராமன், வழக்கில் சிக்கியுள்ள சாதி வெறியர்களுக்கு ஆதரவாக 'நீதி' கேட்டு, திருநல்லூரிலிருந்து புதுக் கோட்டைக்குப் பேரணி நடத்தப் போவதாக மிரட்டியுள்ளார்.

புதிய தமிழகம் கட்சியினர் சாதி வெறியர்களைத் தண்டிக்கக் கோரி பேரணி நடத்தப் போவதாக அறிவித்ததும், அதற்குப் போட்டியாக சாதிவெறியைக் கிளறிவிட்டு பேரணி நடத்தி ஆதாயமடைய சேதுராமன் கும்பல் அலைகிறது. தென் மாவட்டங்களைப் போலவே கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டு, தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைப் பறித்து அடக்கி ஒடுக்கவே ஆதிக்க சாதி வெறியர்கள் அலைகின்றனர்.


★☆★

விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட 18 தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் அம்பேத்கர் நினைவு நாளான டிசம்பர் 6-இல் கடலூரில் தடையை மீறி ஊர்வலம் நடத்துவோம் என்றனர். இதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் சில போலீசார் குடிபோதையில் பெரம்பலூர் மாவட்டம் ஒகளூருக்கு நவம்பர் 30-ஆம் தேதி வந்தனர். தினவெடுத்துத் திரிந்த போலீசார் சில இளம் பெண்களின் மேலாடைகளைப் பிடித்திழுத்தும் கையைப் பிடித்தும் வம்பு செய்தனர். இதை இளைஞர்களும் பெரியவர்களும் கண்டித்ததையொட்டி தகராறு ஏற்பட்டதும் போலீசு ரௌடிகள் தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர். இதனால் ஆத்திரமுற்ற இளைஞர்கள் போலீசார் மீது கல்லெறிந்து வாகனங்களைச் சேதப்படுத்தி விரட்டியடித்தனர்.

எதிர்ப்பைக் கண்டு பின்வாங்கிய போலீசு, மறுநாள் டிசம்பர் முதல் தேதியன்று 18 வாகனங்களில் பழிவாங்கும் வெறியோடு பெரும் படையாக ஒகளூர் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பைச் சுற்றி வளைத்தது. பெரியவர்கள், குழந்தைகள், பெண்கள் என்றும் பாராமல் போலீசு குண்டர்கள் தடிகளாலும், இரும்புக் கம்பி, இரும்புச் சாட்டைகளாலும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கினர். பெரும்பான்மையாக விவசாயக் கூலித் தொழிலாளர்களைக் கொண்ட இக்குடியிருப்பிலுள்ள ஒவ்வொரு வீட்டின் கூரைகளும் கதவு - சன்னல்களும் போலீசாரால் உடைத்தெறியப்பட்டன. பாத்திரங்களும் உடமைகளும் நொறுக்கப்பட்டன.

போலீசு குண்டர்கள் நடத்திய வெறியாட்டத்தில் ஒரு பெண்ணின்

கலப்புத் திருமணம் செய்த 'குற்றத்'திற்காக மேல் சாதிவெறியர்களின் சித்திரவதைக்கும் அவமதிப்புக்கும் ஆளாகி ஊரைவிட்டே விரட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் - தமது மனைவி, குழந்தைகளுடன்.





படிப்பகம்

www.padippakam.com

கை எலும்பு முறிந்து போனது. 70 வயதான மூதாட்டிக்கு கை - கால்களில் பலத்த காயமானது. ஒரு போலீசு ரௌடி பூட்சு காலால் வயிற்றில் எட்டி உதைத்ததால் லோகநாயகி என்ற பெண்ணுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டது. அவருக்கு நீண்ட காலமாகக் குழந்தை இல்லாமல் இப்போதுதான் கருவுற்றிருந்தார் என்று குமுறுகிறார்கள் இக்கிராமப் பெண்கள். ஒரு போலீசு வெறியன் எரியும் அடுப்பில் வைத்திருந்த வெந்நீர் பாத்திரத்தை எட்டி உதைத்ததில், வீட்டில் படுத்திருந்த 9 மாதக் கைக் குழந்தையின் மேல் வெந்நீர் கொட்டி உடலெங்கும் வெந்து புண்ணாகியது. இரும்புத் தடியால் ஒரு போலீசுக்காரன் தாக்கியதில் எட்டு வயது சிறுவனின் மண்டை உடைந்தது.

முன்னூறுக்கும் மேற்பட்ட போலீசு குண்டர்கள் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக நடத்திய இப்பயங்கரவாத வெறியாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலுக்குப் பிறகு 69 பேரை போலீசு கைது செய்தது. அதில் பாதிக்கும் மேற்பட்டோர் கைக்குழந்தைகளுடன் உள்ள தாய்மார்கள். மற்றவர்கள் கல்லூரி மாணவர்களும் பள்ளிச் சிறுவர்களும், முதியவர்களுமாவர்.

பாசிச ஜெயா ஆட்சியில், கொடியன் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது போலீசு நடத்திய வெறியாட்டத்துக்கு இணையாக நடந்துள்ள ஒகளூர் அக்கிரமத்தைப் பற்றி எந்த பத்திரிகையும் உண்மைச் செய்திகளை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தன. இக்கொடூரத் தாக்குதல் பற்றி வட்டாட்சியரிடம் முறையிட்டும் கூட எந்தவொரு அதிகாரியும் இக்கிராமத்தை எட்டிப் பார்க்கவில்லை. மதுரையைச் சேர்ந்த மக்கள் உரிமைக்கான கண்காணிப்புக் குழுவினர், மாவட்ட ஆட்சியர் உண்மை நிலை பற்றிய விசாரணை அறிக்கையைக் கொடுத்து முறையிட்ட பிறகுதான், நிர்வாக அதிகாரிகளை ஒகளூருக்கு அனுப்பி நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

ஆனாலும் இன்று வரை எந்தவொரு போலீசு வெறியன் மீதும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் கடலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த ஏறத்தாழ 300 பேர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பேரணி நடத்த அவ்வமைப்புக்குத் தொடர்ந்து 5 மாதங்களாக உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

★☆★

கடலூர் அருகிலுள்ள புலியூரில் தாழ்த்தப்பட்டோரின் சவ ஊர்வலம் தமது வீதியின் வழியே செல்லக் கூடாது என்று கடந்த டிசம்பர் 15-ஆம் தேதியன்று வன்னிய சாதி வெறியர்கள் தடுத்ததையொட்டி இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் மூண்டது. ஏற்கனவே தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவர் வன்னிய சாதிக்காரர் முன்பு மரியாதையின்றி புகை பிடித்ததையொட்டி அவர் தாக்கப்பட்ட சம்பவம் நடந்ததால், இரு தரப்புக்குமிடையே கடுமையான வாக்குவாதமும் கைகலப்பும் நேராமல் பெரியவர்கள் தடுப்பதுமாக இருந்தது. பின்னர் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞர் வன்னிய சாதிக்காரரை அறைந்து விட்டதாக சாதி வெறியர்கள் வதந்தியைப் பரப்பி ஆத்திரமூட்டினர். சுற்றிலுமுள்ள எட்டு கிராமங்களிலிருந்து திரண்ட 300-க்கும் மேற்பட்ட சாதிவெறியர்கள், டிசம்பர் 16-ந் தேதியன்று தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பை முற்றுகையிட்டுச் சூறையாடி, கண்ணில் பட்டவர்களை எல்லாம் தடிகளாலும், இரும்புக் கம்பிகளாலும் தாக்கினர். அப்பகுதியிலுள்ள மளிகைக்கடை, தையல் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. இக்குடியிருப்பிலுள்ள தாழ்த்தப்பட்டோரின் 500-க்கும் மேற்பட்ட வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன. 13 பேர் வன்னிய சாதிவெறித் தாக்குதலால் படுகாயமடைந்து மருத்துவமனையில் கிடக்கிறார்கள்.



சாதியவெறியும், அதிகாரத்திமிரும் கொண்ட தமிழகப் போலீசால் தாக்கப்பட்ட ஒகளூரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட தாய்.

வன்னியர் - தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை பற்றி வாய்கிழியப் பேசும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாசு, தமது கட்சியின் வன்னிய சாதி வெறியர்களைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட முணுமுணுக்கவில்லை. இராமதாசின் சாதி ஒற்றுமை சவடால்களைக் கூட ஏற்க மறுத்து, பா.ம.க.வுக்கு அடிப்படையாக உள்ள வன்னியர் சங்கமே பிளவுபட்டு அதில் ஒரு பிரிவு வெளிப்படையாகவே சாதி வெறியைக் கக்குகிறது.

சமத்துவபுர சதிராட்டங்கள், சமபந்தி விருந்துகள், சமாதான - நல்லிணக்கப் பசப்பல்களால் சாதிய வெறியாட்டங்களை ஒருக்காலும் தடுத்துவிட முடியாது; ஆட்சிகள் மாறினாலும், போலீசு ரௌடிகளின் சாதிவெறி அடக்குமுறைகள் நீங்கி விடாது என்பதையே இச்சம்பவங்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. ஆதிக்க சாதி வெறிச் சங்கங்களைத் தடை செய்து சாதி வெறியாட்டங்களில் ஈடுபட்டோர் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை ஏவி தண்டிக்கக் கோரி ஒடுக்கப்பட்ட சாதியினரும், புரட்சிகர - ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து போராடுவதுதான், சாதிய ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்கான முதற் பணியாக இருக்க முடியும்.

• வேலு

வன்னிய சாதிவெறியாட்டம் : கூரை, கதவுகள் பிய்த்தெறியப்பட்டு, தாக்கப்பட்ட புலியூர் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு.





படிப்பகம்

www.padippakam.com

# அபலைப் பெண் அஞ்சனாவும் காமவெறி அரசு எந்திரமும்

அரசு தலைமை வழக்குரைஞராக இருந்த காம வெறியன் மீது துணிந்து பாலியல் குற்ற வழக்கு தொடர்ந்ததால், கும்பல் பாலியல் வன்முறையை ஏவி விட்டு பழி தீர்த்துக் கொள்ளப்பட்ட அஞ்சனா மிஸ்ராவின் துயரக் கதை.

**பா**லியல் வன்முறை என்பது ஆணாதிக்க வெறியை நிலை நாட்டுவதற்கான ஓர் ஆயுதம் மட்டுமல்ல; இந்தியாவில் சாதி, மத, இன வெறியாட்டத்துக்கும் அரசியல் ஆதிக்கத்துக்கும் பழி வாங்கலுக்குமான ஓர் ஆயுதம். அதிலும் மாநில முதல்வர், அரசுத் தலைமை வழக்கறிஞர் போன்ற உயர் அரசியல் - அதிகார வர்க்கத்துக்கு எதிராகத் துணிந்து நின்றால், ஒரு பெண்ணுக்கு எப்படியெல்லாம் அச்சுறுத்தல்களும் தாக்குதல்களும் வரும் என்பதை ஒரிசாவில், அண்மையில் நடந்துள்ள அஞ்சனா மிஸ்ரா மீதான பாலியல் வன்முறைக் கொடூரம் நிரூபித்துக் காட்டிவிட்டது.

அஞ்சனா, நடுத்தர வர்க்க மேல்தட்டு குடும்பத்தில் பிறந்த அவர், 1986-இல் சுபாஷ் மிஸ்ரா என்ற வனத்துறை அதிகாரிக்கு மணமுடிக்கப்பட்டு, கணவனின் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளானார். இரு குழந்தைகளுக்குத் தாயான அவரை வதைத்து, மனநோயாளிகள் காப்பகத்தில் சேர்க்க முயற்சித்து முடியாமல் போகவே, வீட்டிலேயே அவரை ஓர் அறையில் அடைத்து வதைத்தனர் மிஸ்ராவும் அவனது குடும்பத்தாரும். பின்னர் சில மகளிர் அமைப்புகளின் உதவியால் போலீசுத் துறையின் மனித உரிமை பாதுகாப்புப் பிரிவு மூலம் அவர் 1997-இல் மீட்கப்பட்டார்.

பின்னர் அவா பெண்கள் காப்பகத்தில் தங்கி தனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கு தொடர்பாக 1997 ஜூலையில் மாநில அரசுத் தலைமை வழக்கறிஞரான இந்திரஜித்ரே-யைச் சந்தித்து முறையிட்டார். இரு சந்திப்புகளுக்குப் பிறகு ஜூலை 11-ந் தேதியன்று தனது அலுவல அறையிலேயே அந்தக் காமவெறியன் அஞ்சனா மீது பாலியல் வன்முறையை ஏவ முயற்சித்தான். ஆடைகள் கிழிபட்டு அவனிடமிருந்து தப்பியோடி வந்த அஞ்சனா, போலீசில் புகார் செய்ததோடு, மாநில காங்கிரசு முதல்வர் ஜே.பி. பட்நாயக்கிடமும் புகார் மனுச் செய்தார்.

ஆனால் முதல்வர் பட்நாயக்கும் தலைமை வழக்கறிஞர் ரே-யும் காமவெறிக் கூட்டாளிகள். இருவரும் சேர்ந்து நடத்திய காமக்களியாட்டங்கள் ஏராளம். எனவே அஞ்சனாவின் வழக்கை நீர்த்துப் போகச் செய்யவும் தனது காமவெறிக் கூட்டாளியைத் தப்புவிக்கவும் அவர் தனது அதிகாரத்தைக் கொண்டு தகிடுதத்தங்களில் இறங்கினார். இவற்றால் வெறுப்புற்ற அஞ்சனா, மாநில உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியிடம் முதல்வர் தலைமை வழக்கறிஞரின் கூட்டுச் சதியையும் அரசு எந்திரம் இதற்கு உடந்தையாக நிற்பதையும் குறிப்பிட்டு தமக்கு நீதி வழங்குமாறு மனுச் செய்தார். அதைத் தொடர்ந்து ஒரிசா உயர்நீதி மன்றம் அஞ்சனாவின் வழக்கை மத்தியப் புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ) விசாரணைக்கு உத்தரவிட்டது. கடந்த 1997 இறுதியில் விசாரணையை முடித்த புலனாய்வுத் துறை, காம வெறியனும் தலைமை வழக்கறிஞனுமான ரே-மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. ஆனாலும் அவனை பட்நாயக் பதவியிலிருந்து நீக்கவில்லை.

இதற்கிடையே, ஓய்வு பெற்ற ஒரிசா மாநில முன்னாள் தலைமை போலீசு இயக்குனரான அமியாபூஷண் திரிபாதி, உயர் நீதி மன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அதில் முதல்வர் பட்நாயக்கின் காமவெறி வக்கிரங்கள் பற்றியும், அரசுத் தலைமை வழக்கறிஞர் ரே-யுடன் சேர்ந்து அவர் நடத்திய காமக்களியாட்டங்கள் பற்றியும் விளக்கி அதனாலேயே ரேயைக் காப்பாற்ற முதல்வர் முயற்சிக்கிறார் என்றும் குறிப்பிட்டிருந்தார். அஞ்சனாவின் கிழிபட்ட ஆடைகளை கைரேகைத் துறைக்கு அனுப்பி சோதிக்காமல் கிடப்பில் போட்டதையும், கைரேகைத் துறைத் தலைவரை இடமாற்றம் செய்து விசுவாசியை நியமித்ததையும், வழக்கு விசாரணையை இழுத்தடிக்குமாறு பதவியிலிருந்த போது தன்னிடம் மிரட்டியதாகவும் அந்த போலீசு உயரதிகாரி அம்பலப்படுத்தினார்.

இதைத் தொடர்ந்து, அஞ்சனாவுக்கு ஆதரவாக பல்வேறு மகளிர் அமைப்புகளும் எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி, பட்நாயக்கையும் ரேயையும் பதவி நீக்கி விசாரணை செய்யக் கோரிப் போராடின. அஞ்சனா விவகாரம் பூகம்பமாக மாநிலத்தையே ஆட்டிப் படைத்தது. ஆளும் காங்கிரசுக் கட்சியே பிளவுபட்டு துணை முதல்வர் வசந்த்குமார் பிஸ்வால் தலைமையில் ஒரு குழு பட்நாயக்குக்கு எதிராகக் கலகம் செய்தது. பொது மக்களின் போராட்ட நிர்பந்தம் காரணமாக ரேயை அரசுத் தலைமை வழக்கறிஞர் பதவியிலிருந்து நீக்குவதாக முதல்வர் பட்நாயக் அறிவித்தார். ஆனாலும் அவர் சிறப்ப நீதி மன்ற அரசுத் தலைமை வழக்குறைஞராக் கப்பட்டுள்ளார். ரே-வுக்கு பதிலாக அரசுத் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டுள்ளவர் ரேவுக்கு விசுவாசமான, அவர் வழக்குகளை நடத்தியவராவார்.

இந்நிலையில், தலைநகர் புவனேஸ்வரிலுள்ள தமது முன்னோர்களின் வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த அஞ்சனா, ஒரிசா தொலைக்காட்சி செய்தி ஆசிரியரான சுதானுகுரு என்பவர் துணையுடன், கடந்த ஜனவரி 9-ஆம் தேதியன்று இரவு ஒரு வாடகைக் காரில், கட்டாக்கிலுள்ள தனது வழக்கறிஞரைச் சந்திக்கச் சென்றார். வழியில் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் மூன்று பேர் கொண்ட ஒரு கும்பல் அவர்களை வழிமறித்து தாக்கியதோடு, அஞ்சனா மீது பாலியல் வன்முறையை ஏவியது.

முதல்வருக்கும் ரே-க்கும் எதிராகச் செயல்பட்டால் சுட்டுக் கொன்று விடுவோம் என்று எச்சரித்தது. முதல்வருக்கும் ரே-க்கும் எதிராக வழக்கு தொடுத்ததற்காகவே இப்படிச் செய்கிறோம் என்று சொல்லியே அஞ்சனாவை நாசம் செய்தது. கும்பல் பாலியல் வன்முறையால் சிதைந்து, எழுந்து நடக்கக் கூட முடியாத நிலையில் கட்டாக்கிலுள்ள தனது வழக்கிறஞரிடம் அஞ்சனா முறையிட்ட போது, ஆட்சியாளர்களின் பாலியல் பயங்கரவாதத்தைக் கண்டு அஞ்சிய அவர், உதவ மறுத்து ஒளிந்து கொண்டார். பின்னர் உடல் ரீதியாக துவண்டாலும், மன உறுதியோடு அஞ்சனா போலீசில் புகார் செய்தார். அஞ்சனாவும் சுதானுகுருவும் நள்ளிரவில் நடந்த இப்பயங்கரவாத வெறியாட்டத்தை பத்திரிகைகளுக்கு விளக்கினர்.

இக்கொடூரத்தை அறிந்ததும் ஒரிசா மாநிலமெங்கும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு வீதிகளில் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். பல நகரங்களில் கடையடைப்பும் கண்டன ஊர்வலங்களும் நடந்தன. டெல்லி சென்றிருந்த முதல்வர் பட்நாயக் ஒரிசாவுக்குத் திரும்பும் செய்தியறிந்ததும் விமான நிலையத்தை முற்றுகையிட்ட மக்கள், அவரைத் தாக்குவதற்குக் காத்திருந்தனர். பட்நாயக், போலீசு பாதுகாப்புடன் வேறு வழியில் தப்பியோடினார். ஆத்திரமடைந்த மக்கள் போலீசு வாகனங்களைத் தாக்கி தீயிட்டனர். இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்தோடு எதிர்க் கட்சிகளும் காங்கிரசிலுள்ள அதிருப்தி குழுவும் பட்நாயக்கைப் பதவி விலகக் கோரி போராட்டங்களை நடத்துகின்


கும்பல் பாலியல் வன்முறையை ஏவிப் பழிவாங்கப்பட்ட அஞ்சனா மிஸ்ரா.



www.padippakam.com

றன.

பாலியல் வன்முறைக் கும்ப லைச் சேர்ந்த 7 பேரைக் கைது செய் துள்ளதாகவும், நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளதாகவும், தனக் கும் இப்பாலியல் பயங்கரத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என் றும் முதல்வர் பட்நாயக் பசப்புகி றார். ஆனால், அஞ்சனாவுக்கு உரிய போலீசு பாதுகாப்பு அளித் துள்ளக் கூறி அவரை நிராதரவாக விட்டது; பாலியல் பயங்கரவாதக் கும்பல் முதல்வர் மற்றும் ரே-யின் பெயரைக் குறிப்பிட்டு அச்சுறுத்தி யிருப்பது; இரவு நேரத்தில் தேசிய நெடுஞ்சாலையில் செல்லாமல் குறுக்கு வழியில் காரில் சென்றது தான் இத்தகைய விபரீதத்துக்குக் காரணம் என்று பிரச்சினையைத் திருப்புவது; வாடகைக் காரோட் டியை மிரட்டி, வழியில் ஒரு சிற் றுண்டிச் சாலையில் தேநீர் குடித்த போது, அஞ்சனா போலீசு பாது காப்பின்றிச் செல்வதை காமுகர்கள் பார்த்து விட்டதுதான் காரணம் என்று இந்த விவகாரத்தை சாதா ரண வழிப்பறி - காமவெறியர்க ளின் தாக்குதலாக சித்தரிப்பது, குற்றவாளி களைக் கைது செய்துள்ளதாக கூறிய போதிலும் அவர்களை அஞ்சனா முன் நிறுத்தி அடையாளம் காட்டச் செய்யாமல் இழுத்தடிப்பது - முதலான அனைத்துமே முதல்வர் பட்நாயக்கின் தில்லுமுல்லு, மோசடிகளை அம்பலப்படுத்திக் காட்டு கின்றன.



காமவெறி அரசு பயங்கரவாத முதல்வர் பட்நாயக்குக்கு எதிராக ஒரிசாவில் நடந்த ஆர்ப்பாட்டம்.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு, இதே பட்நாயக் ஒரிசா முதல்வராக இருந்த போது தனது வீட்டு வேலைக்காரச் சிறுவர் களை ஓரினச் சேர்க்கைக்கு மிரட்டிப் பணி யவைத்துப் பயன்படுத்திய விவகாரம் வெளிவந்தது. ஆனால் இந்திரா - ராஜீவ் பரம்பரையின் நம்பகமான விசுவாசி என்ப தாலேயே, இந்த விவகாரம் வெளிவந்து நாடெங்கும் நாறிய போதிலும், அவர் மீது எந்த நடவடிக்கையு மின்றி பாதுகாக்கப்பட்டார். இப் போது காங்கிரசுத் தலைவி சோனி யாவும் விசாரணை முடிவுகள் வெளிவரும் வரை பட்நாயக் மீது எந்த நடவடிக்கையோ, பதவி வில கலோ தேவையில்லை என்கிறார். இரு மாதங்களுக்கு முன்புதான், ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல் தொடர்புடையவர்கள், குடிகாரர் கள், பெண் பித்தர்கள் முதலா னோரை நீக்கி காங்கிரசுக் கட்சி யைத் தூய்மைப்படுத்தப் போவ தாக அவர் சவடால் அடித்தார். அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை பட்நாயக்கைப் பாது காக்க அவர் நடத்தும் பம்மாத்து களே அம்பலப்படுத்துகின்றன.

அரசியல்வாதிகள், அதிகாரி கள், போலீசு, நீதித்துறை உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்க அமைப்பே இப்பாலியல் பயங்கர வாதக் கொடுமைக்கு உடந்தையாக வும் உறுதுணையாகவும் செயல்பட் டுள்ளது. வரம்பற்ற அதிகாரத்தைக் கொண்டுள்ள இந்த அரசியல் அமைப்பை எதிர்த்து நிற்கும் எவருக்கும் இந்த கதிதான் ஏற்படும் என்று மிரட்டி எச்ச ரிக்கும் வகையிலேயே இந்த அட்டூழியம் நடந்துள்ளது. மனிதத் தன்மையற்ற - ஜன நாயக விரோதமான இக்கேடுகெட்ட அரசி யலமைப்பைத் தூக்கியெறிவதுதான். இது போன்ற பாலியல் வன்முறைகளுக்குத் தீர் வாக முடியும்.

• குமார்

## ஏழைகள் என்றால் கிள்ளுக் கீரையா?

கடந்த மாதத்தில் பெய்த பெருமழை யால் திருச்சி நகரமே வெள்ளத்தால் சூழப் பட்டு மிதந்தது. வெள்ளநீர் குடியிருப்புக ளில் புகுந்ததால் பாதிக்கப்பட்ட மக்கள் கோயில்கள், பள்ளிகளில் தங்க வைக்கப் பட்டு பெரும் அவலத்திற்கு ஆளானார்கள்.

ஆனாலும் எப்போதும் போல ஆமை வேகத்திலேயே மாநகராட்சி செயல்பட் டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் செய்வதில் கூட மிகவும் தாமதப்படுத்தி இழுத்த டித்தது. இன்னொருபுறம் அப்படிச் செய்யப்பட்ட நிவாரண உதவிக ளில் கூட வர்க்க பாசத்துடன் நடந்து கொண்டது.

நடுத்தர மற்றும் மேட்டுக் குடி யினர் வசிக்கும் குமரன் நகர், சீனி வாச நகர், பாத்திமா நகர், தியாகராஜ நகர் போன்ற பகுதிகளில் மாநக ராட்சி நிர்வாம் தரமான, சுத்தமான உணவை, பொட்டலங்களாக பாக் கெட் வடிவில் கொடுத்தன. இதற் கென தனியாக ஒரு "ஜீப்"பில் வந்து வீடு வீடாக விநியோகித்தனர்.

ஆனால் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் மேலப்பாண்ட மங்கலம், அரவா னூர் போன்ற பகுதகளில் மாநக ராட்சி குப்பை வண்டிகளில் அண்டா நிறைய உணவை வைத்துக் கொண்டு "எல்லோரும் வாங்கிட்டுப் போங்க!" என்று அழைத்தனர். உணவுப் பாத்திரங்களுடன் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு, உணவை வாங்கச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை போட்டி போட்ட னர்.

இந்த அநியாயத்தைக் கண்ட இப்பகு தியிலிருந்த ம.க.இ.க. தோழர்கள் இருவர், "ஏன் குப்பை வண்டியில் வந்து சோறு கொடுக்கறீங்க? மத்த மேல் சாதி - மேட்டுக் குடி ஏரியாவா இருந்தா இப்படிச் செய்வீங் களா?" என்று கேட்டனர். குப்பை வண்டி யில் வந்த ஊழியர்களோ, "எதுவா இருந்தா லும் கமிஷனரிடம் போய் பேசுங்க; சோறு போட விடுங்க; இல்லைன்னா வழிய விடுங்க, நாங்க கௌம்புறோம்; பட்டினி கிடக்கப் போறது இந்த சனங்கதான்" என்று திமிராகப் பேசினர்.

தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் வாழும் பகுதியில், குப்பை வண்டியில் வெள்ள நிவாரண உணவு விநியோகம். திருச்சி மாநகராட்சியின் சாதியத் திமிர்.



'சமத்துவபுரம் கண்ட தமிழி னத் தலைவரின்' ஆட்சியில் தாழ்த் தப்பட்ட உழைக்கும் மக்களுக்குக் கிடைக்கும் சமத்துவம் இதுதான்!

இதில் குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம் என்னவென் றால், மழை - வெள்ளத்தால் மக்கள் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, காவிக் கொடியுடன் மாருதி "ஜீப்" பில் வந்த ஆர்.எஸ்.எஸ். பரிவாரங் கள் பார்ப்பனர்கள் வாழும் பகுதியில் மட்டும் மீட்புப் பணி - உதவிகளைச் செய்தது. இந்து வெறியன் இராம. கோபாலன் அடிக்கடி குறிப்பிடும் "இந்து ஒற்றுமை" என்பது பார்ப் பன ஒற்றுமைதான் என்பதை இது நிரூபித்துக் காட்டியது.

தகவல்:
ம.க.இ.க., திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# கிரிமினல் மாஃபியாக்களின் கோரப் பிடியில் மும்பய்

**வீட்டுமனை அதிபர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் - நடிகர்கள் - இயக்குநர்கள் போன்ற புதுப் பணக்காரக் கும்பலை மிரட்டி பணம் பறித்து வந்த மும்பை மாஃபியா கும்பல்கள், இப்பொழுது நடுத்தர வர்க்கத்தையும் குறி வைக்கத் தொடங்கிவிட்டனர்.**

• அக்டோபர் 13, மும்பய் நகரில் கிழக்கு பந்தப் பகுதியில் தனது 11-வது வகுப்புத் தேர்வு எழுத டி.ஏ.வி. கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த 18 வயது ஜெய்சந்த் சர்மாவை துப்பாக்கிக் குண்டு துளைத்து இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியது.

அங்கே அதே நேரம் 59 வயது குடும்பத் தலைவி பெர்னான்டசு தனது இரண்டு பேத்திகளை அழைத்துக் கொண்டு குளிர்பானம் வாங்க மெட்ராஸ் கேஃப் ஓட்டலுக்கு வந்தார். அவரையும் துப்பாக்கிக் குண்டு துளைத்தது. அந்த ஓட்டல் நிர்வாகி கோவிந்தன் குட்டி, வாடிக்கையாளர் ரகுராவ் ஆகியோரும் குண்டடிபட்டனர்.

அந்த சிறிய ஓட்டல் உரிமையாளர்கள் இருவர் கிரிமனல் - மாஃபியா கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்ட போது, பிறரை பீதியூட்ட அந்த கிரிமினல்கள் சுட்டதில்தான் இத்தனை பேர் குண்டடிபட்டனர்.

அந்த கும்பல் தப்பிச் செல்லும் வழியில் இன்னொரு ஓட்டல் தொழிலாளி நாம்தியோ என்பரையும் சுட்டு காயப்படுத்தியது.

• கடந்த தீபாவளிக்கு முந்திய 14 நாட்களில் 19 பேர் மும்பை நகரில் கிரிமினல் - மாஃபியா கும்பல்களால் சுட்டுக் கொல்லப்பட்டு மும்பை நகரமே பீதியில் இருந்தது. எனவே, ஏஞ்சல் தொழில்நுட்பக் கல்லூரியின் முதலாண்டு மாணவரான 18 வயது சிகந்தர் சித்திக்கின் தாய் தனது மகனை கவனமாயிருக்கும்படி எச்சரித்தார். கவனமாயிருந்தும் கூட நவம்பர் 4-ஆம் தேதி கல்லூரி செல்ல பந்த்ரா ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்திருந்த சிகந்தரின் வலது கால் துப்பாக்கிக் குண்டால் துளைக்கப்பட்டது.

இவருக்கு அருகே இருந்த முன்னாள் மாநில கீழ் நிலைச் செயலாளர் ராம்தாஸ் சொனாவனே (63 வயது)யின் நெஞ்சை துப்பாக்கிக் குண்டு துள்ளத்துச் சென்றது. இவர் ஆபத்துக் கட்டத்தைக் கடந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

42 வயது அப்துல் மக்தாபாய் என்ற தாவூது கிரிமினல் - மாஃபியா கும்பலைச் சேர்ந்தவனை 3 பேர் கொண்ட வேறொரு கும்பல் சுட்டுக் கொன்றபோதுதான் மேற்கூறிய இருவர் பாதிக்கப்பட்டனர்.

இன்றைக்கு மும்பை மாநகரமே கிரிமினல் - மாஃபியா குண்டர்களின் பிடியல் சிக்கித் தவிக்கிறது. கிரிமினல்களுக்கிடையிலான மோதல், போலீசு - கிரிமினல்கள் மோதல்களினால் சாதாரண மக்களுக்கான பாதிப்பு மிக அதிகம்.

''திங்கட்கிழமை காலையில் பேப்பர் படித்தபோது மும்பையில் இத்தனை துப்பாக்கிச் சூடும் கொலைகளுமா என அதிர்ச்சியாயிருந்தது. மறுநாள் எனது மாமியாரே துப்பாக்கிச் சூட்டில் சிக்குவார் என கற்பனையில் கூட நினைக்கவில்லை'' என திருமதி. பெர்னான்டசின் மருமகன் கென்னத் மாஸ்டர் கூறுகிறார்.

கிரிமினல் - மாஃபியாக்களின் செயல்பாடு சாதாரண மக்களையும் மாத வருமானம் பெறும் நடுத்தர வர்க்கத்தவரையும் பாதிக்குமளவு ஊடுறுவி, நிலைமை விபரீதமாகப் போகிறது.

• ஒரு தனியார் நிறுவன ஏற்றுமதிப் பிரிவு உயரதிகாரி, தனது தொழில் விசயமாக அடிக்கடி ரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்துள்ளார். இவரைக் குறி வைத்து மிரட்டிப் பணம் பறித்து விட்டனர்.

• ஒரு வழக்கறிஞர் தனது மகளுக்கு ஆடம்பரத் திருமணம் நடத்த திட்டமிட்டார். இதைத் தெரிந்து கொண்ட அமர் நாயக் கும்பலைச் சேர்ந்தவன், திருமணம் சிறப்பாக நடக்க தனக்கு '5' லட்சம் வேண்டும் என மிரட்டினான். அதிர்ந்து போன வழக்கறிஞர், எளிய முறையில், கோயிலில் வைத்து உறவினர்களை மட்டும் அழைத்து மண விழாவை முடித்து விட்டார்.

• வெளிநாட்டுக் கார் வாங்க திட்டமிட்ட மருத்துவர் ஒருவர், அடுத்தடுத்து இரு மருத்துவர்கள் கிரிமினல்களால் கொல்லப்பட்டபின், தனது உயிருக்கு பயந்து மாருதி எஸ்டீம் வாங்கிக் கொண்டார்.

• சீமைச் சாராயம் விற்று, அருந்த உரிமை பெற்றதோடு, இரவு நடன நிகழ்ச்சி நடத்தி அபரிமித இலாபம் பெறும் ஓட்டல் உரிமையாளர்களை மிரட்டிப் பணம் பறித்தது போலவே, இவையில்லாத சாதாரண ஓட்டல் உரிமையாளர்களையும் மிரட்டி, பணம் தராத உரிமையாளர்களைச் சுட்டுக் கொல்கின்றனர்.

இப்படி தானுண்டு, தன் வேலையுண்டு என்று வாழ்கின்ற நடுத்தர வர்க்கத்தினரையும் மிரட்டிப் பணம் பறிப்பது என கிரிமினல் - மாஃபியா கும்பல் இறங்கிவிட்டது. நாளை துப்பாக்கி முனையில் நடுரோட்டில் மக்களை மறித்து பணத்தையோ உயிரையோ பறிக்கலாம்.

இந்தக் கிரிமினல் - மாஃபியாக்களின் ராஜ்ஜியம் இப்போது எங்கும் நீக்கமற நிறைந்து விட்டது. ஒருபுறம் இந்த கிரிமினல் - மாஃபியாக்களை ஊட்டி வளர்ப்பதே போலீசு, ஓட்டுப் பொறுக்கிகள், அதிகாரிகள்தான். இவர்களது துணையும் உதவியும் இல்லாமல் கிரிமினல்கள் செயல்பட முடியாது.

கிரிமினல் - மாஃபியா கும்பல் ஒரு நபரை மிரட்டிப் பணம் கேட்பது பற்றி காவல் துறையில் மிக ரகசியமாக முறையிட்ட அடுத்த நிமிடமே, கிரிமினல்களுக்குத் தகவல் கிடைக்கிறது. உடனே திரும்ப மிரட்டுவதோடு, கூடுதலாகவும் பணம் கேட்கின்றனர். மும்பை போலீசு கமிசனர் ரொனால்ட் எச். மென்டொன்காவே, சில கருப்பு ஆடுகள் போலீசிலேயே இருக்கலாம் என ஒப்புக் கொள்கிறார்.

★☆★

கள்ளக் கடத்தல் என்றாலே நினைவுக்கு வருவது பம்பாய்தான். இந்தக் கள்ளக் கடத்தலில் முக்கியமானது தங்கம். அடுத்தது மின்னனு சாதனங்கள். மன்மோகன் சிங்கின் தாராளமய - தனியார்மய - உலகமய புதிய பொருளாதாரக் கொள்கையால், தங்கத்தையும் மின்னனுச் சாதனங்களையும் கடத்துவது இலாமகரமற்றுப் போனது.

குளிர்பானம் வாங்குவதற்காக வீட்டில் இருந்து கடைவீதிக்கு வந்த பெர்னான்டஸ், மாஃபியாக்களின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கிக்கொண்டார்.



www.padippakam.com



**மாஃபியாக்களின் பாணியில், ஆயத்த ஆடை தயாரிப்பாளர் ஒருவரை மிரட்டிப் பணம் பறிக்க முயலுகையில் கைதான இளைஞர்கள்.**

சமூக விரோதச் செயல்கள் மட்டுமே அறிந்த இந்த கள்ளக் கடத்தல்கார கிரிமினல் - மாஃபியா கும்பல், அன்று வளங் கொழித்த, இதனது செயலுக்குத் தகுதியான ரியல் எஸ்டேட் தொழிலில் புகுந்தது. அதிலிருந்து ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள், திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள், சினிமாத் துறையினர் என பல தரப்பினருடனும் தொடர்பு கொண்டது. பரஸ்பரம் உதவிக் கொண்டனர்.

ரியல் எஸ்டேட், சினிமாத் துறைகளில் தனது சமூக விரோதச் செயல்கள் மூலம் கொள்ளையிடத் தொடங்கியது, மாஃபியா கும்பல். தொழிற்சங்கத் தலைவர் தத்தா சமந்த்தைக் கொன்ற காரணமே, பஞ்சாலை நிலங்களை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு மாற்றுவதற்கு அவர் தடையாயிருந்ததுதான். இதேபோல் எண்ணற் கொலைகள்.

தாராளமயக் கொள்கை வீழ்ச்சியுடன் ரியல் எஸ்டேட், சினிமாத் துறைகள் நெருக்கடிக்குள்ளாகவே, கிரிமினல்களின் வருமான வழி அடைபட்டுப் போனது. சினிமா, ரியல் எஸ்டேட்டிலுள்ள கருப்புப் பண, கள்ளச் சந்தைப் பேர் வழிகளை விட்டுவிட்டு, யாரிடம் பணமிருந்தாலும் பறிப்பது என கிரிமினல்கள் புறப்பட்டனர்.

வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், உயர் அதிகாரிகள், நடுத்தர வர்க்க வியாபாரிகள் என மேட்டுக் குடி நடுத்தர வர்க்கத்தினரைக் குறி வைத்தனர். இவர்களிடமோ அளவு கடந்த கருப்புப் பணம் புழங்குவதில்லை.

பெரும் நெருக்கடிக்குள்ளான நடுத்தர வர்க்கத்தினர் போலீசை நெருக்கினர். இதுவரை இதைப் பற்றி அக்கறையற்றிருந்த போலீசு, வேறு வழியின்றி கிரிமினல்களைக் கட்டுப்படுத்த வேண்டியதாகியது.

இதற்கிடையே கிரிமினல் - மாஃபியா கும்பல் இதுவரை தமக்குள் பிரித்து வைத்திருந்த 'சாம்ராஜ்ய' எல்லைகள் மீறப்பட்டன. கிரிமினல் அருண் காவ்லியின் அடியாள் ஒருவன் கூறுவது போல 10 கோடி ரூபாய் வருமானம் 4 கோடியாகக் குறைந்தது. எனவே அடியாட்களுக்கு பணம் தர முடியாது, அவரவர் தமது தேவைக்கேற்ப அவர்களே தேடிக் கொள்ள வேண்டும் என 'தாதா' காவ்லி கூறிவிட்டார். இன்றைக்கு 50 ரூபாய்க்குக் கொலை செய்யக் கூட ஆட்கள் கிடைக்குமளவு நிலைமை மாறிவிட்டது. இதனாலேயே கிரிமினல்களின் எல்லை மீறல்களும் அதனால் அவர்களுக்குள் மோதல்களும் கொலைகளும் இதற்கிடையே சிக்கி பொது மக்கள் பாதிக்கப்படுவதும் என மும்பையே குலுங்குகிறது.

இதிலே தலைமை தாதா போல இயங்குவது தாவூது இப்ராகிம் கும்பல். இவனிடமிருந்து பிரிந்த சோட்டா ராஜன், சிங்கப்பூரிலிருந்து கொண்டு தனது அடியாட்களை இயக்குகிறான். 1993 குண்டு வெடிப்புக்குப் பிறகு முஸ்லிம் குண்டர்களை எல்லாம் ஒழித்துக் கட்டிவிடுவதாக, மதச் சாயம் பூசி தனது கொலைகளைத் தொடர்கிறான். பாரதீய ஜனதாவும் சிவசேனாவும் தம்மை ஆதரிக்கலாம் என சோட்டா ராஜன் கணக்குப் போட்டபடி, சிவசேனா சோட்டா ராஜன் கும்பலைப் பாதுகாக்கிறது.

இவர்கள் தவிர இன்னும் பல கிரிமினல்கள். ஒருபுறம் இவர்கள் பணம் பறிக்க குறி வைப்பதும் கொலைகள் செய்வது மட்டுமின்றி தமக்குள்ளும் மோதல், கொலைகள் தொடர்கிறது. நீதிமன்றங்களையே கொலைக் கூடங்களாக அடிக்கடி மாற்றி, மும்பை நகரையே பீதியில் ஆழ்த்தி வருகின்றனர்.

இருக்கின்ற சட்டப்படியே இக்கும்பல்களைத் தண்டிக்க முடியும். ஆனால் மோதல் என்ற பொய் நாடகத்தில், ஒரு சிலரைக் கொல்கிறது போலீசு. இன்னொரு புறம் மேல்மட்டத் தொடர்பு பற்றி இறந்தவர்கள் பேச மாட்டார்கள் என்பதும் மோதல் நாடகத்திற்கு அடிப்படை.

நீதிமன்றமோ நன்கு தெரிந்த கிரிமினல்களைக் கூட, அற்ப காரணங்களைக் காட்டி விடுவிக்கிறது. தவிர போலீசு வழக்குத் தொடரும் போதே, பொய்யான தகவல்கள் தந்து, வழக்கு தோல்வியடைய உதவுகின்றது.

போலீசும் நீதி மன்றமும் இப்படி இருப்பதால்தான், நேரடியாகப் பார்த்த சாட்சிகள் கூட சாட்சி கூற முன் வருவதில்லை. அப்படியே முன் வருபவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதமில்லை என்பதால் யாரும் துணிந்து வருவதில்லை.

பம்பாய் முன்னாள் போலீசு கமிசனரும் பஞ்சாபில் பயங்கரவாதத்தை 'ஒடுக்கியவர்' என புகழப்படுவருமான ரிபைரோ, போலீசுக்கு இன்னும் அதிகாரம் வழங்க வேண்டும் என்கிறார். நீதிமன்றம் உட்பட யாரும் தலையிடக் கூடாது என்கிறார். இதைவிட சட்டபூர்வ கிரிமினல்களுக்கு வேறு பாதுகாப்பு இருக்கிறதா என்ன?

கிரிமினல்கள் - போலீசு - ஓட்டுப் பொறுக்கிகள் கூட்டு தொடரும் வரை மும்பையில் இரத்த ஆறு ஓடுவது நிற்காது.

இருக்கின்ற சட்டப்படி இந்த சமூக விரோதக் கும்பல்களை தண்டிக்க தடையாயிருப்பது யார்?

1993 குண்டு வெடிப்பு வரை தாவூத் கும்பலை காங்கிரசு ஆதரித்தது. இன்று அருண் காவ்லியை ஆதரிக்கிறது. சோட்டா ராஜன், அமர் நாயக், அஸ்வின் நாயக் என பல கிரிமினல்களை சிவசேனா ஆதரிக்கிறது. இந்த சிவசேனா கட்சியே ஒரு கிரிமினல் - மாஃபியா கூடாரம்தான்.

இன்று மும்பையில் மருத்துவர்கள், சிறு ஓட்டல் உரிமையாளர்கள் வரை கிரிமினல்கள் மிரட்டிப் பணம் பறிப்பதற்கு அடிப்படையே சிவசேனாதான். வினாயகர் சதுர்த்தி, சிவாஜி விழா என இந்து மத வெறி நிகழ்ச்சிகளுக்கு தமது குண்டர்களை ஏவி இப்படி மிரட்டி பல இலட்சங்களைப் பறித்த சிவசேனாவின் 'பிரமுகு'கள் பணத்தில் புரள்வதைக் கண்டபின் தான், கிரிமினல் - மாஃபியா கும்பலும் இதில் இறங்கியது.

எனவே இந்த ஓட்டுப் பொறுக்கிகள், சமூக விரோதிகள் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்.

• பாலன்

www.padippakam.com

# நாய்ச் சண்டையில் இராணுவம்... நாட்டைக் காக்குமா?

இந்திய இராணுவம் ஆயுத பேர ஊழல் பெருச்சாளிகளும், பதவி வெறியர்களும் நிறைந்ததுதான் என்பதை கடற்படை தளபதி விஷ்ணு பகவத் நீக்கப்பட்ட சம்பவம் மீண்டுமொருமுறை நிருபித்துக் காட்டிவிட்டது.

இந்திய கடற்படைத் தலைமைத் தளபதியான அட்மிரல் விஷ்ணு பகவத், கடந்த டிசம்பர் மாத இறுதியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட விவகாரம் இந்திய இராணுவத்தில் நிலவும் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பதவிச் சண்டைகளைப் பகிரங்கமாக்கிக் காட்டிவிட்டது. அதுமட்டுமல்ல; இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ள ஆயுதக் கொள்ளையின் மூலம் சொந்த நாட்டையே சூறையாடக் கிளம்பிவிட்ட இந்துவெறி ஆட்சியாளர்களின் கோரமுகத்தையும் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

கடற்படைத் தலைமைத் தளபதியான விஷ்ணு பகவத் 1999-ஆம் ஆண்டு இறுதி வரை பதவியில் நீடிக்கும் தகுதியைப் பெற்றவர். பதவியிலுள்ள ஒரு தலைமைத் தளபதியை பதவி நீக்கம் செய்துள்ள நடவடிக்கையானது இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக நடப்பதாகும். ''மிகக் கட்டாயமான சூழ்நிலையில்தான், பொறுப்பை நிறைவேற்றத் தவறுவது, தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டது, மனநிலை சரியில்லாதது போன்றவற்றுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு தலைமைத் தளபதியைப் பதவி நீக்கம் செய்யலாம்; அல்லது போர் முனையில் கோழையாகி தப்பியோடினால் இராணுவச் சட்டப்படி மரண தண்டனை கூட விதிக்கலாம். ஆனால் அப்படி எதுவும் இல்லாத நிலையில் கடற்படைத் தலைமைத் தளபதியை பதவி நீக்கம் செய்திருப்பது அதிர்ச்சி தருகிறது. இத்தகைய திடீர் நடவடிக்கைகளால் இந்திய இராணுவத்தின் தார்மீக பலமும், ஒழுங்கும் கட்டுப்பாடும் சிதறும் அபாயம் ஏற்பட்டு விட்டது'' என்று ஓய்வு பெற்ற பல தளபதிகள் பத்திரிகைகளில் பேட்டியளிக்கின்றனர்.

கடற்படை ஒழுங்கு முறைச் சட்டம் தொகுதி 5, பிரிவு 3-இன் படி, கடற்படைத் தலைமைத் தளபதியின் பரிந்துரையின்படிதான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் தலைமைத் தளபதிகள் ஏற்காத - பரிந்துரைக்காத ஒருவரை அடுத்த நிலையிலுள்ள பதவிகளில் நியமிக்கக் கூடாது. ஆனால் கடற்படை துணைத் தளபதியாக ஹரிந்தர்சிங் அமைச்சரவை நியமனக் குழுவால் பரிந்துரை இல்லாமலேயே நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தை ஏற்க இயலாது என்று தலைமைத் தளபதியான விஷ்ணு பகவத் நிராகரித்தார். ஹரிந்தர் சிங் ஆயுதத் தளவாட விற்பனையாளர்களுடன் - தரகர்களுடன் நெருக்கமான உறவு வைத்துள்ளார்; அவர் நேரடியாகப் போரில் ஈடுபட்ட அனுபவமும் இல்லாதவர். அவரைவிட நேர்மையான, அனுபவமிக்க மூத்த அதிகாரிகள் உள்ளனர் என்று கூறிய விஷ்ணு பகவத், மதன்ஜித் சிங் என்பவரைத் துணைத் தளபதியாக நியமிக்க சிபாரிசு செய்தார். இராணுவ அமைச்சகம் அவரது முடிவை மறுபரிசீலனை செய்யக் கோரிய போதிலும் அவர் நிராகரித்து விட்டார். ஆனாலும் அமைச்சக நியமனக்குழு டிசம்பர் 9-ந் தேதியன்று ஹரிந்தர் சிங்கை துணைத் தலைமைத் தளபதியாக நியமித்தது. பா.ஜ.க. கூட்டணியிலுள்ள அகாலி தளம் ஹரிந்தர் சிங்கை துணைத் தளபதியாக நியமிக்க நிர்பந்தம் கொடுத்ததாகவும் செய்திகள் வருகின்றன.

இந்நிலையில், இராணுவ அமைச்சக அதிகாரிகளுடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ள ஹரிந்தர் சிங்கின் நியமனத்தை ரத்து செய்யக் கோரி விஷ்ணு பகவத் வழக்கு தொடுத்தார். வழக்கு மன்றம் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்தது. இதைத் தொடர்ந்து துணைத் தளபதியான சுசில்குமார் உள்ளிட்ட நான்கு மூத்த தளபதிகள் நியமன முறைகேடுகளை எதிர்த்து வழக்கு தொடுத்தனர். இதற்கிடையே ஹரிந்தர் சிங்கை விஷ்ணு பகவத் அச்சுறுத்தி மிரட்டியதாகவும் தனக்கு பாதுகாப்பு தருமாறு கோரியும் தொலைபேசியில் ஹரிந்தர் சிங் தம்மிடம் கூறியதாக இராணுவ அமைச்சர் பெர்னாண்டஸ் வெளிப்படையாக பேட்டியளித்தார். இக்குற்றச்சாட்டை மறுத்த விஷ்ணு பகவத், இராணுவ அமைச்சக செயலாளரான அஜித்குமார், ஹரிந்தர் சிங்குக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் இந்த நாய்ச் சண்டை தீவிரமான நிலையில், டிசம்பர் 30-ஆம் நாளன்று கடற்படை தலைமைத் தளபதியான விஷ்ணு பகவத் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தலைமைத் தளபதியாக சுசில்குமார் நியமிக்கப்பட்டார். அதே போல இராணுவ அமைச்சகச் செயலாளரான அஜித்குமார் மாற்றப்பட்டு பிரசாத் என்பவர் நியமிக்கப்பட்டார்.

ஹரிந்தர்சிங் நியமனத்தை பகவத் ஒப்புக் கொள்ளாததால்தான் இப்படியொரு பிரச்சினை ஏற்பட்டது என்று முதலில் கூறி வந்த ஆட்சியாளர்கள் பின்னர், விஷ்ணு பகவத் மீது கடுமையான பல குற்றச் சாட்டுகளை சுமத்துகிறார்கள். ''நாட்டின் பாதுகாப்பைப் பாதிக்கும் அளவில் சில நடவடிக்கைகளை பகவத் செய்துள்ளார். அதனால்தான் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டியதாயிற்று என்கிறார் பிரதமர் வாஜ்பாய். நாட்டின் பாதுகாப்புக்கே உலை வைக்கும்படி அப்படி என்ன நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார் என்று கேட்டால், அவற்றைச் சொல்வது நாட்டின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிரானது என்கிறார் இராணுவ அமைச்சர். முக்கியமான எதிர்க் கட்சிகளின் தலைவர்களைக் கலந்தாலோசித்து விட்டுத்தான் பகவத்தின் பதவி நீக்கம் பற்றிய முடிவு எடுக்கப்பட்டது என்று வாஜ்பாயும் பெர்னாண்டசும் கூறினாலும், காங்கிரசு நாடாளுமன்ற கட்சித் தலைவரான சரத்பவார் அதை மறுத்துள்ளார். இதனால்தான் பகவத்தின் பதவி நீக்கப் பின்ன


பதவி நீக்கப்பட்ட கடற்படைத் தலைமைத் தளபதி விஷ்ணு பகவத் மனைவி நிலோஃபர், ''மும்பய்க் கலவர விசாரணையில், தான் இந்து மதவெறியர்களை எதிர்த்து வாதாடியதற்காக, தனது கணவர் பழிவாங்கப்பட்டுவிட்டதாக''க் குற்றஞ் சுமத்துகிறார்.




படிப்பகம்

www.padippakam.com

ணியை வெளிக்கொண்டுவர விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று பல முப்படை உயரதிகாரிகளும் ஜெயலலிதா உள்ளிட்டு பல அரசியல் தலைவர்களும் கோரினர். ஆனால் ''இது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயம்; இதில் எந்த விசாரணையும் நடத்த முடியாது'' என்று பிரதமர் வாஜ்பாய் திடலடியாக மறுத்து விட்டார்.



பகவத் பதவி பறிக்கப்பட்ட அடுத்த நாள் அவருடைய மனைவி நிலோஃபர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, ''கடற்படைக்கு ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்கள் வாங்குவதில் என் கணவருக்கும் அமைச்சர் பெர்னாண்டசுக்கும் உள்ள கருத்து வேறுபாடு, பதவி நீக்கத்துக்கு ஒரு காரணமாகும்'' என்று இந்த விவகாரத்தில் புதைந்து கிடக்கும் ஓர் உண்மையைக் கோடிட்டுக் காட்டினார். 1999-ஆம் ஆண்டில் கடற்படைக்கு ஏராளமான நவீன ஆயுதங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆயுத வியாபாரிகள் எனது கணவர் பதவியில் நீடிப்பதை விரும்பவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

விஷ்ணு பகவத்தின் மனைவி நிலோஃபர் முஸ்லிம் - பார்சி தம்பதிகளுக்குப் பிறந்தவர். உச்சநீதி மன்ற வழக்கறிஞரான நிலோஃபர், மும்பையில் இந்து வெறியர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்திய மத வெறிக் கலவரங்கள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட சிறீகிருஷ்ணா கமிஷனில் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தியவர். பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவாக இவரும் பிற ஜனநாயக உணர்வுள்ள வழக்கறிஞர்களும் ஆதாரங்களைக் காட்டி வாதிட்டதன் விளைவாக, சிறீகிருஷ்ணா கமிஷன் பாரதீய ஜனதா - சிவசேனா குண்டர்களின் கொலை வெறியாட்டத்தை தனது தீர்ப்பு அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளது. தம்மைத் தோலுரித்துக் காட்டியவரின் கணவர் என்ற காழ்ப்புணர்ச்சியுடன் பா.ஜ.க. அரசு பழிவாங்கியுள்ளது என்றும் நிலோஃபர் குற்றம் சாட்டுகிறார்.

விஷ்ணு பகவத்துக்கும் பா.ஜ.க. அரசுக்குமிடையே பதவி நியமனம் மற்றும் மதச் சார்பின்மையை ஒட்டி ஏதோ கொள்கைப் போர் நடப்பதாக குறுக்கி சுருக்கிவிட முடியாது. உண்மையில் இதன் பின்னே மிகப் பெரிய ஆயுத பேர விவகாரம் புதைந்து கிடக்கிறது. 1999-ஆம் ஆண்டில் இந்திய கடற்படைக்கு 9000 கோடி ரூபாய்க்கு புதிய நவீன ஆயுதங்கள் - தளவாடங்கள் - சாதனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆயுத இறக்குமதிக்கான ஒப்பந்தங்களைப் பெறுவதில் ரஷ்யாவும் ஜெர்மனியும் போட்டி போடுகின்றன. ஆயுதங்கள் வாங்கும் உத்தேசம் பற்றிய செய்திகள் கசிந்த உடனேயே ஆயுத விற்பனையாளர்களும் தரகர்களும் கடற்படைத் தளபதிகளைச் சூழ்ந்து கொண்டு மொய்க்கின்றனர். இரகசிய பேரங்களும் விருந்துகளும் அன்பளிப்புகளும் தொடர்கின்றன. போபர்ஸ் பீரங்கி, வெஸ்ட்லாந்து ஹெலிகாப்டர் போல தரங்குறைந்த, காலாவதியாகிப் போன ஆயுதங்களை தலையில் கட்டுவதன் மூலம் ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகளும், கமிஷன், அன்பளிப்பு மூலம் பா.ஜ.க. ஆட்சியாளர்களும் படைத்தளபதிகளும் கோடி கோடியாய் கொள்ளையிடக் கிளம்பியுள்ளனர். இதில் நடக்கும் போட்டி, சண்டையின் ஓர் அங்கமாகவே கடற்படைத் தலைமைத் தளபதியான விஷ்ணு பகவத்தின் பதவி பறிப்பும் இராணுவ அமைச்சர் பெர்னாண்டசுக்கு விசுவாசமான சுசில்குமாரின் நியமனமும் நடந்துள்ளது.

✱ விமானந்தாங்கி - ஏவுகணை கொண்ட போர்க் கப்பலை நிறுவ ஏறத்தாழ ரூ. 2000 கோடி செலவு பிடிக்கும். இத்தகைய போர்க் கப்பலை ரஷ்ய வல்லரசிடமிருந்து வாங்க பா.ஜ.க. அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் இந்தியாவிலேயே இத்தகைய போர்க் கப்பலைக் கட்டியமைக்க முடியும் என்று பகவத் கூறுகிறார். இந்த விவகாரத்தில் அவருக்கும் ஆட்சியாளர்களுக்குமிடையே முரண்பாடு நிலவி வந்தது.

✱ அணு ஆயுத நீர் மூழ்கிக் கப்பல் கட்டும் திட்டத்துக்கு ரூ. 5000 கோடி வரை செலவாகும். இவ்வாண்டில் அதற்கான முதற்கட்ட கட்டுமானப் பணிகள் ரஷ்ய 'உதவி'யுடன் நடைபெற உள்ளன. அரசின் இத்திட்டத்திற்கு பகவத் உடன்படவில்லை.

✱ ரஷ்யாவிடமிருந்து மூன்று பீரங்கிப் போர்க் கப்பல்களை ரூ. 1500 கோடி செலவில் இந்திய அரசு வாங்கத் தீர்மானித்துள்ளது. இவற்றை உள்நாட்டிலேயே தயாரிக்க முடியும் என்று வாதிடும் பகவத் ஆட்சியாளர்களுடன் முரண்பட்டார்.

✱ ரஷ்யாவிடமிருந்து ரூ. 200 - 300 கோடி செலவில் நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கும் ஒப்பந்தத்தை பகவத் ஏற்கவில்லை.

✱ நீர்மூழ்கிக் கப்பல் கட்டுவதறகான கட்டுமானப் பணி ஒப்பந்தங்கள் தனியாருக்கு விடப்பட்டதில் இலஞ்சமும் ஊழலும் தொடர்கிறது என்று பகவத் எதிர்க்கிறார்.

✱ கார்வார் கடற்படைத்தளம் 3 கட்டங்களாக விரிவாக்கம் செய்து மேம்படுத்த ரூ. 2000 கோடிக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டப் பணிகளுக்கு இவ்வாண்டில் ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயுத வியாபாரிகளும் தரகர்களும் தளபதிகளையும், அதிகாரிகளையும் விலைபேசி ஒப்பந்தங்களைப் பெற போட்டி போடுகின்றனர். ஒப்பந்தங்களைத் தனியாருக்கு விடுவதை பகவத்

# விமானப் படையில் ஆயுதக் கொள்ளை

கடந்த ஆண்டு வரை விமானப் படை தலைமைத் தளபதியாக எஸ்.கே. சரீன் என்பவர் பொறுப்பில் இருந்தார். அவரது பதவிக் காலத்தில் ரஷ்யாவிடமிருந்து 40 ''சுகோய்' போர் விமானங்கள் வாங்க ரூ. 7000 கோடிக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. 'சுதந்திர தின', 'குடியரசு தின' விழாக்களில் இந்தப் போர் விமானங்கள் ஆகாய வித்தைகள் காட்டவே பயன்பட்டன. மற்றபடி இந்த விமானங்களைப் போர் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது என்று தொழில்நுட்ப வாதிகளும், மூத்த தளபதிகளும் நிராகரித்த போதிலும் தலைமைத் தளபதி சரீன் இந்தப் போர் விமானங்களை வாங்குவதில் தீவிரம் காட்டினார். ஏனெனில், இந்தப்போர் விமான பேரத்தில் அரசியல்வாதிகள், அதிகாரிகள், தளபதிகள் ஆகியோருக்கு 15% கமிஷன் கிடைக்கும். ஆயுத பேரத் தரகர்களான சவுத்திரி சகோதரர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். நரசிம்மராவ் ஆட்சியிலும் பின்னர் ஐ.மு. ஆட்சியிலும், தற்போதைய பா.ஜ.க. ஆட்சியிலுமாக மூன்று தவணைகளில் ரூ. 7000 கோடி செலுத்தப்பட்டுள்ளது. போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் போல, சுகோய் போர் விமான பேரத்திலும் நடந்துள்ள ஊழல் கொள்ளை, தரகுத் தொகை, அன்பளிப்பு - கமிஷன் பற்றி ரஷ்ய பத்திரிகைகள் நாறடித்த பிறகு, புலனாய்வுத் துறையும் ''ரா''வும் விசாரணையில் இறங்கின. சரீன் பல கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு மாளிகைகள், வர்த்தக நிறுவன வளாகங்கள், கோல்ஃப் மைதானம் ஆகியனவற்றை கட்டியமைத்துள்ள விவகாரம் மெதுவாகக் கசிந்தது. அதற்குப் பின் என்ன நடந்தது என்று தெரியாமல் அனைத்தும் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. சுகோய் விமான பேர ஊழலில் யார் யார் சம்பந்தப்பட்டுள்ளனர்? ஏன் மூடி மறைக்கப்பட்டது? கோடி ரூபாய் கேள்வி இது!

ஆயுத பேரக் கொள்ளையில் கொடிகட்டிப் பறக்கும் ''சுகோய்'' போர் விமானம்.




படிப்பகம்

www.padippakam.com

# ஒய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும்

இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பதவிக் சண்டைக ளில் சிக்கியுள்ள இந்திய இராணுவத்தில் பதவி நியமனங்கள், பதவி உயர்வுகளில் கடுமையான நாய்ச் சண்டை தொடர்ந்து நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 1500 இராணுவ அதிகாரிகளுக்கும் கீழ்நிலை தளபதிகளுக்கும் பதவி உயர்வு தரப்படுகிறது. முப்படைத் தளபதிக ளைக் கொண்ட குழு இதற்கான சிபாரிசுகளைச் செய்கிறது. பிறகு இராணுவ அமைச்சக அதிகாரிகள் இவற்றைப் பரிசீலித்து இராணுவ அமைச்சருக்கு அனுப்புகின்றனர். கோப்புகள் நகரும் ஒவ்வொரு மட்டத்திலும் இலஞ்ச ஊழல், சிபாரிசு, செல்வாக்கு ஆகியவை தான் தீர்மானிக்கின்றன. தரைப்படையில் மட்டும் வாரத்துக்கு 25 புகார்கள் வருகின்றன. ஆண்டுக்கு 8000 புகார்கள் விசாரிக்கப்படு கின்றன. இவற்றால் வெறுப்புறும் அதிகாரிகள் பலர் பதவி விலகிப் போய்விடுகின்றனர். அல்லது வழக்கு மன்றங்களுக்குப் போகிறார் கள். 1982-இல் மட்டும் 4000 அதிகாரிகள் இராணுவத்தை விட்டே விலகியுள்ளார்கள். தினசரி ஒரு வழக்கு வீதம் உச்சநீதி மன்றத்துக்கு வருமளவுக்கு இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் போட்டி, சண்டை, விரக்தி, பதவி விலகல் என்று தொடர்கிறது.

நேரு ஆட்சியில் இராணுவ அமைச்சரான கிருஷ்ண மேனனுக் கும் ஜெனரல் திம்மையா, ஜெனரல் சௌத்திரி ஆகியோருக்கமி டையே நாய் சண்டைகள் முற்றியதையும், நேரு குடும்பத்தைச் சேர்ந்த கவுலுக்கு முறைகேடாக பதவி உயர்வு தரப்பட்டதையும் அன்றைய வரலாறு நன்கறியும். இந்திரா ஆட்சிக் காலத்தில் தரைப் படைத் தளபதி எஸ்.கே. சின்ஹாவுக்கு முறைப்படி பதவி உயர்வு தர மறுத்து, வைத்யா தலைமைத் தளபதியாக்கப்பட்டார். இதனால் வெறுப்புற்ற சின்ஹா இராணுவத்திலிருந்தே விலகி காங்கிரசு எதிர்ப்பு அரசியலில் குதித்தார். 1982-இல் பரோடா நீதிமன்றத்தில் லெப்டினண்ட் கர்னல் பஜாஜ் என்கிற அதிகாரியின் லஞ்ச ஊழல் மோசடிகளுக்கு எதிராக மேஜர் சந்திரகுமார் தொடுத்த வழக்கு நாடெங்கும் நாறியது.

ராஜீவ் ஆட்சிக் காலத்தில் போபர்ஸ் பீரங்கியை வாங்கி சிபா ரிசு செய்தால் தலைமைத் தளபதியாக்குவோம் என்று துணைத் தளபதிகளிடம் நேரடியாகவே பேரங்கள் நடந்தன. போபர்ஸ் பீரங்கி பேர ஊழலுக்குத் தடையாக இருந்ததால் துணைத் தளபதி மாயாதாஸ், முறைப்படி பதவி உயர்வு தரப்படாமல் பழிவாங்கப்பட் டார். இத்தாலிய ஏவுகணைப் படகு வாங்குவதில் ஆயுதத் தரகன் வின்சத்தாவுடன் உடன்பட்டு மோசடி செய்ய மறுத்த கடற்படை கமாண்டர் நய்யார் பதவி உயர்வு மறுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட் டார். பின்னர் அவர் மீது பொய்யான குற்றச் சாட்டுகளும் வீசப்பட் டன. இந்த அநீதிக்கு எதிராக அவர் வழக்கு தொடுக்க வேண்டியதா யிற்று.

இப்படி ஆயுத பேர லஞ்ச ஊழலுக்கு உடந்தையாக இருந்து தரக்குறைவான ஆயுதத் தளவாடங்களைச் சிபாரிசு செய்ய மறுக் கும் இராணுவ அதிகாரிகள் பழிவாங்கப்படுகிறார்கள். அரசியல் மற்றும் இராணுவத் தலைமைக்கு வேண்டிய நபர்களுக்கு பதவி நியமனம், பதவி உயர்வு தருவதற்காக இராணுவ விதிகள் மீறப்படு கின்றன. நியாயமான, தகுதியுடைய பதவி உயர்வுகள் முடக்கப்படு கின்றன. கட்டாய ஓய்வில் போகுமாறு பல அதிகாரிகள் நிர்பந்திக் கப்படுகின்றனர். கீழ்மட்டங்களில் சர்வ சாதாரணமாக நடக்கும் இந்த முறைகேடுகள் இப்போது மேல்மட்டத்திலும் புழுத்து நாறுகி றது.

இந்திய இராணுவம் கட்டுப்பாடும், ஒழுக்கமும், நாட்டுப்பற் றும் விசுவாசமும் கொண்டது; அரசியலுக்கு அப்பாற்பட்டது; புனித மானது என்றெல்லாம் ஆட்சியாளர்கள் பிரமையூட்டுகிறார்கள். ஆனால் மெதுவாகக் கசியும் உண்மைகள் இந்த மாயைகளைத் துடைத்தெறிந்துவிட்டன. இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடு கள், பதவிச் சண்டைகளில் சிக்கியுள்ள இந்திய இராணுவம் நாட் டையும் மக்களையும் பாதுகாக்கும் என்ற பிரமை இனியும் தேவை யில்லை. இந்த இராணுவத்திடமிருந்து நாட்டையும் தம்மையும் பாதுகாத்துக் கொள்ள மக்கள் தயாராக வேண்டியதே இன்றையத் தேவையாக உள்ளது.

எதிர்க்கிறார்.

— இப்படி ஒரு சில உண்மைகள் மட்டும் மெதுவாகக் கசிந்துள்ளன. கடற்ப டைத் தலைமைத் தளபதியாக இருந்த விஷ்ணு பகவத் உள்நாட்டுத் தொழில்நுட் பத்திலும் 'சுதேசி'யிலும் நம்பிக்கை கொண்டவர் என்றும், இதனாலேயே அவர் மிகப் பெரிய அந்நிய ஆயுத இறக் குமதிகளை எதிர்த்து வந்தார் என்றும் கூறப்படுகிறது. தமது கொள்ளைக்கு முட் டுக் கட்டையாக இருந்ததாலேயே ஆயுத வியாபாரிகளின் 'பாக்கெட்'டில் உள்ள பா.ஜ.க. ஆட்சியாளர்கள் பகவத்தைப் பதவி நீக்கம் செய்துள்ளனர். ஆனால் நாட்டின் பாதுகாப்பு, இராணுவ இரகசி யம் என்ற பீதியூட்டி தமது மோசடிகளை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர். தேச நலன், தேசப் பாதுகாப்பு என்கிற பெயரில் மக்களிடமிருந்து முற்றாக மறைக்கப் பட்டு, இரகசியமான முறையில் இவர்கள் நடத்தும் பேரங்கள் எங்கோ தொலை தூரத்தில் இருந்து இயங்குவதாகத் தெரிந் தாலும், இந்தக் கொடிய மிகப் பெரிய அரசு எந்திரம்தான் நமது நாட்டையும் மக்களையும் ஆட்டிப் படைக்கிறது. ஆட் சிகள் மாறினாலும் நிலையாக இருந்து நிர்வாகம் செய்யும் இந்த அரசு எந்திரம் முழுவதும் ஆளும் வர்க்கங்களான தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிர புக்கள் மற்றும் அந்நிய ஏகாதிபத்தியங்க ளின் நலன்களுக்காகவே இயங்குகிறது.

ஆயுதக் கொள்ளை! ஆயுத விற்ப னையின் மூலம்தான் ஏகாதிபத்தியவாதி கள் மற்றெல்லாத் தொழில்களையும் விட அதிகமாகக் கொள்ளையடிக்கிறார்கள். அதேபோலத்தான் ஏழை நாடுகளின் சர் வாதிகார - பாசிச கும்பல்களும் மற் றெல்லா வழிகளையும் விட மிக அதிக மாக ஆயுத பேரத் தரகு வேலை மூலம் தமது நாட்டையே சூறையாடுகின்றன. ஈரானின் ஷா, பிலிப்பைன்சின் மார்க் கோஸ், சிலியின் பினோசெட், இந்தியா வின் போபர்ஸ் கொள்ளையன் ராஜீவ் என சொந்த நாட்டையே சூறையாடிய ஆயுதக் கொள்ளையர்களின் பட்டியல் நீள்கிறது. அந்த வரிசையில் இப்போது இந்துவெறி பாசிச ஆட்சியாளர்களும் இடம் பெறத் துடிக்கிறார்கள்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட விஷ்ணு பகவத் - வாஜ்பாயுடன்; ஆயுத பேரக் கொள்ளையில் உங்களுக்குக் கிடைத்த பங்கு எவ்வளவு என்று கேட்கிறாரோ?



நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதா லேயே, அண்டை நாடுகளை எச்சரிக் கவே அணுகுண்டு வெடித்ததாக அன்று இந்துவெறி ஆட்சியாளர்கள் நியாயப்ப டுத்தினார்கள். இப்போதும் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டதாலேயே கடற்படைத் தலைமைத் தளபதியைப் பதவி நீக்கம் செய்ததாக காரணம் காட்டுகிறார்கள். ஆம்! நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆயுதப் பேரக் கொள்ளையின் மூலம் சொந்த நாட்டையே சூறையாடக் கிளம்பி விட்ட இந்துவெறி பாசிச ஆட்சியாளர்க ளால் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

• மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## ருவாண்டா இனப்படுகொலை குற்றவாளிகளுக்கு அனைத்துலக நீதிமன்ற தண்டனை

1994-இல் ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள ருவாண்டா நாட்டில் பெரும்பான்மை ஹூடு இனவெறியர்கள், சிறுபான்மை டுட்சி இனத்தவர்களைப் படுகொலை செய்தனர். அன்றைய உயர்மட்ட ஆட்சியாளர்கள் 35 பேர் மீது அனைத்துலக நீதிமன்றத்தில் ஐ.நா. சபை வழக்கு தொடுத்தது.

ஜீன்பால் அகயெசு என்கிற மேயர், 8 இலட்சம் டுட்சி இனத்தவர்களைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிச் சித்திரவதை செய்து கொன்றதற்கு தலைமை தாங்கிய காமுக - சாடிச - கொலைகாரன். 17 மாத விசாரணைக்குப் பின் இவனது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படலாம். அப்போதைய ருவாண்டா பிரதமர் ஜீன் கம்பண்டா இனப்படுகொலை பற்றி மே மாதம் ஒப்புதல் வாக்குமூலம் தந்ததால் ஏற்கனவே அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ருவாண்டா மக்களோ இந்த விசாரணையின் வேகம், தண்டனை குறித்து அதிருப்தி அடைந்துள்ளனர். ஏற்கனவே ருவாண்டா நாட்டு நீதிமன்றம் கீழ்மட்ட குற்றவாளிகள் 116 பேருக்கு மரண தண்டனையை நிறைவேற்றிவிட்டது.

## உயிர் மரபணு கடத்தல்காரர்களின் சொர்க்கமாக இந்தியா

ஐ.நா.வின் ஆய்வின்படியே மிக அதிக அளவில் பல வகையான உயிர் மரபணு கூறுகள் கொண்டது கேரள மாநிலம். இவற்றைக் காப்பதற்கான முறையான சட்டம் ஏதும் இல்லாததால், பல வெளிநாட்டவர்கள் குழந்தை விளையாட்டுப் போல இவற்றைத் திருடிச் செல்வது எவ்விதக் கட்டுப்பாடுமின்றி தொடர்கிறது.

சார்க் மீனிலிருந்து தயாரிக்கப்படும் 'ஸ்குவாலமின்' என்ற பொருள் புற்று நோயை குணப்படுத்துவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு அமெரிக்கர் பல சார்க் வகை மீன்களை கடத்திச் செல்வது பற்றி கேரள விஞ்ஞானிகள் தகவல் தரவே மும்பய் விமான சுங்க அலுவலகத்தில் மீன்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் கடத்தியவன் மீது நடவடிக்கை ஏதுமில்லை.

## ஆந்திர போலீசின் கொலை வெறியாட்டம்

கடந்த 1998-ஆம் ஆண்டில் மட்டும் நக்சலைட்டுகளுடன் மோதல் என்ற பொய் நாடகத்தின் மூலம் அப்பாவி மக்கள் 275 பேர் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் குழு உட்பட ஆந்திராவிலுள்ள ஆறு குடியுரிமைக் குழுக்கள் இவ்வாண்டு துவக்கத்தில் ஒரு உண்மையறியும் குழுவை அனுப்பி ஆய்வு செய்தன. இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகளை விவரிக்கிறது இக்குழுவின் அறிக்கை.

போலீசு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் இளைஞர்கள் யாரும் இது வரை வீடு திரும்பியதில்லை. தோட்டாக்கள் துளைக்கப்பட்ட அவர்களின் உயிரற்ற உடல்கள்தான் கிடைக்கின்றன. இதுபற்றிய போலீசாரின் முதல் தகவல் அறிக்கையோ, பிரேதப் பரிசோதனை முடிவுகளோ யாருக்கும் தரப்படுவதில்லை. கொலைகார போலீசை அடையாளம் காட்டினால் அப்போலீசை வேறு பகுதிக்கு மாற்றி பாதுகாக்கின்றனர்.

எட்டு இலட்சம் டுட்சி இனத்தவரைப் படுகொலை செய்த ஹூடு இனவெறியன் அகயெசு (மேலே); குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதைப் பார்த்துவிட்டுத் திரும்பும் ருவாண்டா மக்கள்.





## குஜராத்தில் தாழ்த்தப்பட்ட 'இந்து'க்களின் மீது ஆதிக்க சாதி இந்துக்களின் வன்முறை

மெசனா மாவட்டத் தலைநகர் மெசனாவிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது தவடியா கிராமம். சௌத்திரி - படேல் சாதியினர் அதிக அளவிலும், கையளவேயான தாழ்த்தப்பட்ட மக்களும் இங்கு வசிக்கின்றனர். எட்டு ஆண்டுகளுக்கு முன் தாழ்த்தப்பட்ட பெண் ஒருவர், கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டார். தாழ்த்தப்பட்டவர்கள் வழக்குப் பதிவதை ஆதிக்க சாதி வெறியர்கள் தடுத்து விட்டனர். சில ஆண்டுகளுக்கு முன் தாழ்த்தப்பட்ட ரிக்ஷா தொழிலாளியின் இரு கால்களை உடைத்து, வாழ்வைப் பறித்துவிட்டனர். இதே மாவட்டம், வத்நகர் தாலுகா, உந்தை கிராமத்தில் 35 வயது தாழ்த்தப்பட்டவரான ஹரிபாயின் 5 வயது குழந்தை பொது இடத்தில் சிறுநீர் கழித்து விட்டதற்காக, ஆதிக்க சாதியினரால் ஹரிபாய் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டார். உயர்சாதிக்காரருக்கு மரியாதை தரவில்லை என இன்னொரு ரிக்ஷா தொழிலாளி ஜெயந்திபாய் கத்தியால் குத்தப்பட்டார். தாழ்த்தப்பட்டோர் மீதான அடக்குமுறைகள் இப்படியே தொடர்கின்றன.

கிறித்துவ மதத்துக்கு மாறிவிட்டதாகக் கூறி, தெற்கு குஜராத் பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் இந்து மதவெறியர்களால் தாக்கப்படுகின்றனர். வடக்கு குஜராத்திலோ, இந்து மதத்திற்குள் சிக்குண்டு கிடக்கும் தாழ்த்தப்பட்டவர்களை, மனு தர்மத்தைக் கூறித் தாக்குகின்றனர்.

## கொள்ளைக்கார பஜ்ரங்தள்

மும்பை போரிவில்லி பகுதி கிறித்தவர்கள், கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். நடனம் இந்துப் பண்பாட்டிற்கு எதிரானது என அங்கு புகுந்த பஜ்ரங்தள் குண்டர்கள், விழாவையே நிறுத்தி, அனைவரையும் மிரட்டி விரட்டிவிட்டனர். இந்த நடன நிகழ்ச்சி தடையின்றி நடைபெற பஜ்ரங்தள் அமைப்பிற்கு ரூ. 50,000 நன்கொடை வேண்டும் என அப்பகுதி பஜ்ரங்தள் தலைவன் பேரம் பேசினான். முதலில் விழா ஏற்பாட்டாளர்கள் மறுத்து விட்டனர். தனிப்பட்ட ஒருவர் ரூ. 35,000 தருவதாக பேரம் பேசினார். காசோலை மூலம் பணம் தரப்படுவதை மறுத்த அந்த குண்டன், நேரடியாக பணமாகக் கேட்கவே, பணம் தரப்படவில்லை. பணம் கைமாறியிருந்தால், ஒருவேளை நடனம் பாரதப் பண்பாடாகியிருக்கும்.

## மக்கள் நலப் போராட்டங்களை ஒடுக்கும் உச்சநீதி மன்றத் தீர்ப்பு!

கடந்த டிசம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் கட்டுமானப் பணிகளை எதிர்த்த பொது நல வழக்கு ஒன்றில் கூறிய தீர்ப்பு மக்கள் நலத்திற்காகப் போராடுவோருக்கு எதிரானதாகவும், இயற்கை நீதிக்கு முரணாகவும் உள்ளது. இப்போது அணை போன்ற கட்டுமானப் பணிகளுக்கு எதிராகப் பொது நல வழக்குத் தொடரவும், தடையுத்தரவு பெறவும் உரிமை உண்டு. இவ்வழக்குகள் தோற்றுப் போனால், அந்த கட்டுமானப் பணி தாமதமானதால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை வழக்குத் தொடுத்தவர் ஏற்க வேண்டும் என சுஜாதா வி. மனோகர், பி.என். கிர்பால் என்ற இரு அமர்வு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

பூதாகரமான அரசின் மக்கள் விரோதத் திட்டங்களை யாரும் எதிர்க்கக் கூடாது என்ற முறையில் இத்தீர்ப்பு உள்ளது.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com




# இதுதான் இன்றைய இந்தியா

இந்தியாவில் இப்பொழுது கார் யுத்த மொன்று நடந்து கொண்டிருக்கிறது. மாருதி, டாடா போன்ற உள்நாட்டு நிறுவனங்களும், ஹுண்டாய், ஃபோர்டு, சீலோ, தேவூ போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு சிறிய இரக கார்களை உற்பத்தி செய்து, இந்தியச் சந்தையை மூச்சு திணற வைத்து வருகின்றன. "கொர்ஸா", "மொர்க் ஏ-கிளாஸ்", "பாலியோ", "ஃபீஸ்டா" போன்ற சிறிய இரக கார்கள் இந்தியச் சந்தையில் குதிக்கத் தயாராகி வருகின்றன. இந்தக் கழுத்தறுப்புப் போட்டியின் விளைவாக கார்களின் விலையும் ஓரளவு குறைந்து போனது.

இந்த கார்களின் படையெடுப்பையும் விலைச் சரிவையும் காட்டி, தாராளமயமாக்கலின் பலனை இந்தியர்கள் அனுபவிக்கத் தொடங்கி விட்டதாக மன்மோகன் சிங் - சிதம்பரம் வகை யறாக்கள் வானத் துக்கும் பூமிக்குமாக எவ்விக் குதிக் கிறார்கள். உண்மையிலேயே, இந்தப் பலனை அனுபவிக்கும் இந்தியர்கள் யார்? வெங்காயத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்த பொழுது, அதைச் சாப்பாட்டில் இருந்தே விலக்கி வைத்த சராசரி இந்தியனா? ஒவ்வொரு நாளும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டே செல்லும் பொழுது, கார்களின் விலை குறைந்து போனதைக் காட்டி பெருமையடித்துக் கொள்வது வக்கிரமான தில்லையா?

இதோ இந்தப் பெண் கைக்குழந்தையோடு தெருவில் இறங்கி, தனது கணவனுக்கு வேலை கேட்டுப் போராடுகிறாள். "ஒன்று என் கணவனுக்கு வேலை கொடு; இல்லை, விஷத்தைக் கொடுங்கள். நாங்கள் நிம்மதியாகச் செத்துப் போகிறோம்" என்கிறார் அவர். அவளது கணவனின் வேலையைப் பறித்தது எது? அவளைக் கைக்குழந்தையோடு நடுத் தெருவுக்கு விரட்டியது எது? இதே தாராளமயமாக்கம் தான். ஸ்கூட்டர்களைத் தயாரித்து வந்த, ஆந்திர அரசுக்குச் சொந்தமான ஆல்வின் தொழிலகத்தை மூடச் சொல்லி உத்திரவிட்டது உலக வங்கி. அவள் கணவனுக்கு வேலை பறிபோனது.

கடந்த ஏழு - எட்டு ஆண்டுகளில் எத்தனை இலட்சம் தொழிலாளர் குடும்பங்களை தாராளமயமாக்கம் வீதியில் வீசியெறிந்திருக்கும்? நூற்றுக்கணக்கான நெசவாளர்களையும், விவசாயிகளையும் தற்கொலைக்குத் தள்ளிவிட்ட தாராளமயமாக்கத்தை சமூக அக்கறை கொண்ட எவனும் ஆதரிக்க முடியுமா?

விதவிதமான கார்கள் வேண்டும்; ஆடம்பர வாழ்க்கை வேண்டும்; அதற்காக தாராளமயமாக்கலைத் தூக்கிப் பிடிக்கும் மேட்டுக்குடி கும்பல் ஒருபுறம்; வேலை கொடு, கல்வி கொடு, விலைவாசியைக் குறை, வேலையைப் பறிக்காதே என வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளுக்காக தாராளமயமாக்கத்தை எதிர்த்துப் போராடி வரும் உழைக்கும் மக்கள் மறுபுறம். இப்படி இரண்டு கூறாகப் பிளவுண்டு கிடக்கும் இந்தியாவில், நீங்கள் எந்தப் பக்கம்?

